DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

# உதயன் UTHAYAN

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1440 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 10, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# யாழ்ப்பாணத்தில் "போதை" விருந்தில் இளைஞர், யுவதிகள் அட்டகாசம்

## கலாச்சாரம் சீர்கெடுக்கும் வகையில் தென்னிலங்கை அமைப்புக்கள் மேற்கொண்டு வருவதாக குற்றசாட்டு

யாழ்ப்பாணத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் நடைபெற்ற போதை விருந்து குறித்து தொடர்பில் பொலிஸ் விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பைத் தளமாக கொண்டு செயல்படும் சமூக ஊடக அமைப்பினால் இந்த 'போதைப்பொருள்' விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் சமூக சீர்கேடான இந்த செயற்பாடு குறித்து உடனடி விசாரணை நடத்துமாறு யாழ்ப்பாணத்திலுள்ள பல சமூக அமைப்புகள் கோரிக்கையை விடுத்துள்ளன.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

# கனடா தமிழ்க் கவிஞர் கழகம் நடத்திய "கவிச்சரம்" நூல் வெளியீடும் "பாவலர்" விருது வழங்கும் நிகழ்வும் சிறப்புற இடம்பெற்றது

கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கனடா தமிழ்க் கவிஞர் கழகம் நடத்திய "கவிச்சரம்" நூல் வெளியீடும் "பாவலர்" விருது வழங்கும் நிகழ்வும் மண்டபம் நிறைந்த வகையில் நேர்த்தியான முறையில் நகர்ந்து சென்று சிறப்புற இடம்பெற்றது.




விழாத் தலைவர் கந்த ஸ்ரீபஞ்சநாதன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த விழா சிறப்புற நடைபெற செயலாளர் பவானி தர்மகுலசிங்கம் மற்றும் பொருளாளர் க. குமரகுரு ஆகியோர் உட்பட நிர்வாக சபையினர் அனைவரும் ஒத்துழைத்து இறுதிவரை அக்கறையுடன் செயற்பட்டனர்.

(உள்ளே விபரமான செய்தி 13ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG BILLYARD INSURANCE GROUP
STOUFFVILLE
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0 Google Reviews
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy


Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சந்தைப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE


என்றென்றும் உங்கள் இல்லங்களிலும்,
உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!


Happy Diwali
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

## சீனமும் சிங்களமும் சேர்ந்து பௌத்தத்தை பரப்பவும். மதுவும் போதையும் கலாச்சாரத்தை பாழடிக்கவும். பண்பாட்டுப் பிரதேசம் பறிபோகின்றது

இலங்கையில் வடபகுதியின் கலாச்சாரத்தைப் பேணிய வண்ணம் மொழியாலும் கல்வியாலும் கலாச்சாரத்தாலும் செழித்திருந்த எமது பண்பாட்டுப் பிரதேசம் தற்போது சீனமும் சிங்களமும் இணைந்து பௌத்தத்தை காலூன்றச் செய்யவும் மதுவும் போதையும் கலாச்சாரத்தை பாழடிக்கவும் இன்னும் சில வருடங்களில் தமிழின் வாசம் பறிபோன ஒரு பிரதேசமாக மாறி விடுமோ என்று அஞ்சும் அளவிற்கு அங்கு மறைமுகமாகவும் சதித்திட்டம் போன்று காரியங்கள் நகர்த்தப்படுவதை செய்திகள் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான மிகவும் இழிவான முறையில் மேற்கொள்ளப்படும் மோசமான 'அபகரிப்பு' முயற்சிகள் இடம்பெற்று வரும் நிலையில் இவற்றை அரசாங்கமும் சீனத்தின் தூதுவராலயமும் அதிலும் மேலாக சமூக ஊடகங்கள் என்ற போர்வையில் எமது பண்பாட்டுப் பிரதேசத்தில் மெதுவாக 'கால்பதித்து' நடத்தும் மோசமான நடவடிக்கைகள் எமது மண்ணின் மகிமையை எவ்வாறு பாழடிக்கக் காத்திருக்கின்றன என்பதை எமது தமிழ்த் தலைவர்களோ அன்றி அங்கு பணியாற்றி உயர் அரச அதிகாரி-களோ கவனிக்கின்றார்களா? என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

இந்த நாசகார செயற் திட்டங்களில் சீனத் தூதரக அதிகாரிகள் நேரடியாக ஈடுபட்டுள்ளதையும் அதை வட மாகாணத்தின் ஆளுனர் போன்றவர்கள் மறுப்புத் தெரிவிக்காமல் ஏழை மக்களுக்கு உதவிகள் என்ற பெயரில் பௌத்தம் தொடர்பான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளதை இந்தப் பக்கத்தில் எச்சரிக்கும் எழுத்துக்களின் ஊடாக பதிவு செய்கின்றோம்.

இவ்வாறு, இலங்கையின் தூதுவர் தலைமையில் வழங்கப்படும் மேற்படி உதவித்திட்டம் சீனாவின் புத்த சங்கம், இலங்கை மற்றும் சீன பௌத்த நட்புறவுச் சங்கம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை செய்திகள் மூலமாக அறிகின்றபோது. நாம் அனைவரும் ஏன் மௌனிகளாகி விட்டோம் என்ற கேள்விகளையும் நமக்கும் எழுப்ப வேண்டும்.

இந்த பௌத்த மதத்திணிப்பு எமது பண்பாட்டுப் பிரதேசத்தில் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளையில் யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற சமூக ஊடகம் என்ற பெயரில் இயங்கும் சீரழிக்கும் குழு ஒன்று அங்கு எமது சமூகத்தை சீரழிக்கும் "போதை" விருந்து ஒன்றை நடத்தியதாகவும் இதில் இளைஞர், யுவதிகள் அட்டகாசம்: செய்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கவலைக்குரிய தகவல்களை எமது மனங்களில் பதிய வைகைக்கின்றன. ஆனால். நாம் பார்வையாளர்களாக மாத்திரம் அவற்றைப் படிக்கின்ற அளவில் மாத்திரமே உள்ளோம்.

எமது மக்களும் தலைவர்களும் கவனித்து உடனடியாக தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் நாம் எச்சரிக்க விரும்புகின்றோம்.

இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் கடந்த வாரம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து பல்வேறு சந்திப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் கலந்து கொண்ட நிகழ்வுகள் அனைத்திலும் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பங்கெடுத்திருந்ததை எமக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

யாழ்ப்பாணம் பழைய கச்சேரியை சீன நாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக கடந்த காலங்களில் குற்றச்சாட்டு எழுந்த நிலையில் சீனதூதுவர் பழைய கச்சேரியை பார்வையிட்டமை பாரிய சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சென்ற இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் நயினாதீவுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டதுடன் சீன அரசின் உலர் உணவுப் பொதிகளையும் பௌத்த சங்கங்களின் அன்பளிப்பு என்று பெயரிட்டு தமிழ் மக்களுக்கு வழங்கினர். இது மாத்திரமல்ல, திருகோணமலையிலும் புதிதாக இலுப்பைக்குளம் என்னும் கிராமத்தில் தமிழர்கள் வாழும் பகுதியில் புத்தர் சிலை ஒன்று அந்தப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் நிறுவப்பட்டுள்ளமையும் கிழக்கிலும் இதே பாதிப்புக்கள் தொடர்கின்றன என்பதை எமக்கு எச்சரிக்கையாக காட்டி நிற்கின்றன.

(முன்பக்கத் தொடர்ச்சி)

## யாழ்ப்பாணத்தில் "போதை" விருந்தில் இளைஞர், யுவதிகள் அட்டகாசம் :

### கலாச்சாரம் சீர்கெடுக்கும் வகையில் தென்னிலங்கை அமைப்புக்கள் மேற்கொண்டு வருவதாக குற்றசாட்டு

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் மிகவும் இரகசியமாக நடைபெற்ற இந்த விருந்தில், ஒரு டிக்கட் 2000 ரூபாவிற்கும், ஜோடிகளாக கலந்து கொண்டால் நபருக்கு 1500 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டது.

விருந்தில் பங்கேற்பவர்களுக்கு கழிவு விலையில் அறைகளும் ஏற்பாட்டாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சர்ச்சைக்குரிய போதை விருந்தில் சுமார் 54 தனி நபர்களும், 80 இளம் ஜோடிகளும் கலந்து கொண்டுள்ளனர்,

அன்றைய தினம் ஹோட்டலில் இருந்து 13 அறைகள் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. விருந்துக்கு வந்தவர்கள் அதிக பெறுமதியான மதுபானம் மற்றும் ஹெரோயின், ஐஸ், கேரளா கஞ்சா போன்ற போதைப்பொருட்களை பயன்படுத்தியதாகவும் யாழ்ப்பாண சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் கலாச்சாரத்தை சீர்கெடுக்கும் வகையில் இவ்வாறான விருந்துகளை தென்னிலங்கை அமைப்புக்கள் மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சமூகவிரோத விருந்துகளை நடத்துவதை தடுத்து நிறுத்துவதும் அவ்வாறான விருந்துகளை நடத்துபவர்களை கைது செய்வதும் பொலிஸாரின் பொறுப்பாகும் என அந்த அமைப்புக்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றன. அதற்கமைய, பொலிஸார் இந்த விருந்து தொடர்பில் விசாரணைகளை ஆரபித்துள்ளனர்.

## தேசிய மட்டத்தில் சாதனை படைத்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நாடகக் குழுவினருக்கு கௌரவம்



தேசிய மட்டத்தில் சாதனை படைத்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நாடகக் குழுவினரைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் 9-11-2023 அன்று இடம்பெற்றது.

மருனார் மடம் சந்தியிலிருந்து காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தை அண்மித்ததும் மேலைத்தேய வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பாடசாலை பிரதான மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

கௌரவிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப்பணிப்பாளர் திரு. பிரட்லீ அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்திரலிங்கம் அவர்களும் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. ந. கிருபாகரன் அவர்களும் நாடகத்துறை ஆசிரிய ஆலோசகர் மற்றும் நாடகத்தின் வெற்றிக்காக தம்மை அர்ப்பணித்த துறைசார் வல்லுநர்களின் பங்குபற்றுதலுடன் நிகழ்வு நடைபெற்றது நடைபெற்றது.



பெண் சமையல் உதவியாளர் தேவை

ஸ்காபுறோவில் உள்ள வீடொன்றில் சிறு குடும்பம் ஒன்றுக்கு பெண் சமையல் உதவியாளராக பணியாற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு

பாலா மாஸ்டர்:- 416 416 8425

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva

416-706-8160

# முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பகுதியில் நூதன முறையில் பணம் அபகரிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவடு கிழக்கு பகுதியில் இனந்தெரியாத இருவர் சிலரது வீடுகளுக்கு சென்று உங்களுக்கான அஸ்வதா கொடுப்பனவும் 80,000 உங்களது கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், அதை பெறுவதற்கு 30 ஆயிரம் ரூபாய் தற்பொழுது தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், நீங்கள் ஒப்படைத்த பணம் மீண்டும் உங்களது கணக்கில் வைப்பிலிடப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களிற்கு வேலைப்பழு அதிகம் காணப்படுவதால் இன்றை கணக்கினை முடிக்க வேண்டும் எனவும் ஆகையால் மக்களிடம் காசை அறவிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி உத்தியோகத்தரின் கட்டளைக்கமைவாகவே தான் இப்பகுதியில் மக்களின் காசுகளை பெற்று வருவதாக தெரிவித்ததை அடுத்து வீட்டு உரிமையாளர் தன்னிடம் தற்பொழுது பணம் இல்லை என தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கதைத்துவிட்டு சொல்கிறேன் என தொலைபோசியில் உரையாடுவது போல் பாசாங்கு செய்துள்ளனர். மீண்டும் அவரிடம் வந்து அம்மா சரி உங்களிடம் இருக்கின்ற 5000 ரூபாய் பணத்தை தாருங்கள் மிகுதி பணத்தை சமுர்தியில் எடுத்து நாளை தந்தால் மாத்திரமே உங்களது 80 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற முடியும் என தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டில் இருந்த முதியவரும் சரி நாளைக்கு உங்களது பணத்தை பெற்று தருவதாக தெரிவித்து 5000 ரூபாய் பணத்தை ஒப்படைத்துள்ளார். இது போன்று இவர்கள் பலரிடம் பணம் வசூலித்து சென்று உள்ளனர்.

இது தொடர்பாக சமுர்த்தி உத்தியோகிரிடம் வினவிய போது, இது தொடர்பாக தமக்கு எந்தவித தகவலும் தெரியாது எனவும், இது தொடர்பாக தமக்கு எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு ஆட்காட்டிவெளி துயிலும் இல்ல சிரமதான பணிகள் முன்னெடுப்பு



04.11.2023

தமிழ் மக்களின் உரிமைப் போரின் போது தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் நவம்பர் எதிர்வரும் 27ஆம் திகதி தமிழ் மக்களால் நினைவு கூறப்படவுள்ளது.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் மாவீரர் துயிலும் இல்ல பணி குழுவினரால் ஆரம்பிக்கப்பட்டது.

மாவீரர் நெடுங்கீரனின் தந்தை வீரசிங்கம் தலைமையில் குறித்த சிரமதான பணி இடம் பெற்ற நிலையில் சிரமதானத்தின் பின்னர் முதல் பெண் போராளி இரண்டாம் லெப் மாலதியின் சகோதரன் தொம்மை அவர்களினால் பொது சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் தந்தை ராசாவினால் மலர் வணக்கம் ஆரம்பிக்கப்பட்டது.



குறித்த ஆரம்ப நாள் நிகழ்வு மற்றும் சிரமதான பணியில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், துயிலும் இல்ல பணி குழு உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணம் பொலிகண்டியில் திடீரென தாழிறங்கிய கிணறு — உடனடியாக நடவடிக்கை எடுத்த பிரதேசசபை: மூடும் பணிகளை நிறுத்துமாறு பணிப்பு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொலிகண்டி தெற்கில் அமைந்துள்ள கிணறு ஒன்று திடீரென 03-11-2023 அன்று தாழிறங்கியதால் அப்பகுதியில் திடீர் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, பொலிகண்டி தெற்கு J/395 கிராமசேவையாளர் பிரிவில் வீரபத்திரர் ஆலயத்துக்கு அருகில் 04-11-2023 காலை இச்சம்பவம் இடம்பெற்றதை தொடர்ந்து அருகிலுள்ள நிலங்கள், மதிலில் வெடிப்பு ஏற்பட்டது. மிக அருகில் ஆலயமும், வீடுகளும் காணப்படும் நிலையில் அப்பகுதி மக்களுக்கு அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அப்பகுதி பொதுமக்களால் பருத்தித்துறை பிரதேச சபையினருக்கு தகவல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் அங்கு சென்ற பருத்தித்துறை பிரதேச சபையின் மேலதிக செயலாளர் கம்சநாதன் உள்ளிட்ட சபையின் அலுவலர்கள் அங்குள்ள நிலைமையை பார்வையிட்டு மேலும்



அப்பகுதியில் அனர்த்தம் ஏற்படுவதை தடுக்கும் வகையில் உடனடியாக செயற்பட்டனர்.

காலை பிரதேச சபையின் வாகனங்களுடன் சென்ற பத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் இரவு வரை கனரக வாகனங்கள் மூலம் மண்ணை கொண்டுவந்து கொட்டியும், மழை வெள்ளம் குறித்த பகுதிக்குள் நுழையாமல் தடுக்கும் நோக்கில் உரப் பைகளில் மண்ணை இட்டு மண் தடுப்பணையை ஏற்படுத்தி மீண்டும் அனர்த்தம் ஏற்படாமல் தடுக்கும் வகையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.



பின் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உயர்மட்ட உத்தரவை அடுத்து மேற்படி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அப்பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் கிணற்றை தொடர்ந்து அருகிலுள்ள வீடு, கோயில் தாழிறங்கும் பட்சத்தில் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. எனினும் இது தொடர்பில் உடனடியாக அறிவித்தும் அக்கறை செலுத்தக்கூடிய இத்துறைசார்ந்த அரச அதிகாரிகள் அப்பகுதிக்கு உடனடியாக செல்லாதது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசமானது ஆலயம், வீடுகள் உள்ள பொதுமக்கள் நடமாடும் பகுதியாக உள்ளமையால் இப்படியான அனர்த்தங்கள் நிகழும் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் துரிதமாக செயற்பட்டு நிலைமையை நேரில் பார்வையிட்டு பொதுமக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

குறித்த தாழிறங்கிய கிணறு என்ன காரணத்தால் தாழிறங்கியது என்பதை ஆய்வு செய்வதற்காக மூடும் பணியை இடைநிறுத்திமாறு உரிய திணைக்களங்கள் பருத்தித்துறை பிரதேச சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




# ZEE தமிழ் சரிகமப போட்டியாளர்களுக்கு மில்லியன் கணக்கான நிதியுதவி வழங்கிய யாழ்ப்பாண வர்த்தகர்கள்

இந்தியாவின் ZEE தமிழ் சரிகமப நிகழ்ச்சியில் பாடும் இலங்கை - யாழ்ப்பாணம், மலையகத்தை சேர்ந்த கில்மிஷா மற்றும் அஷானி ஆகியோருக்கு அவர்களின் திறமையை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு வர்த்தகர்களால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

"JAFFNA WIN SWEET" உரிமையாளரான நல்லூரை சேர்ந்த சுதன் அவர்களால் அசானி கில்மிசா இருவருக்கும் தலா இரண்டு இலட்சம் வழங்கப்பட்டது.

மேலும் தியாகி அறக்கொடை நிறுவுனரால் அசானிக்கு 10 இலட்சமும், கில்மிஷாவுக்கு 5 இலட்சமும், மேலும் போட்டியில் பங்குபற்றிய தமிழகத்தை சேர்ந்த மேலும் சில குழந்தைகள் உட்பட மொத்தம் 3 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டது.

# மட்டக்களப்பு — சித்தாண்டியில் மேச்சல் தரை ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட 6 பல்கலைக்கழக மாணவர்கள் கைது!

மட்டக்களப்பு சித்தாண்டியில் மேச்சல் தரை பண்ணையாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 6 பல்கலைக்கழக மாணவர்களை, போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் ன்று ஞாயிற்றுக்கிழமை 05-11-2023 அன்று கைது செய்துள்ளதாக சந்திவெளி பொலிசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து அன்று காலை 9 மணிக்கு சித்தாண்டி முருகன் ஆலையத்துக்கு மன்னால் ஒன்று கூடிய மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளரின் இடம் வரை சென்று அங்கு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அந்த பகுதியில் கலகம் அடக்கும் பொலிசார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்ற ஆர்பாட்டம் முடிவுற்ற பின்னர் மாணவர்கள் பஸ்வண்டியில் கிழக்கு பல்கலைக்கழகத்தை நோக்கி பஸ்வண்டியில் பிரயாணித்த போது பின்னால் சென்ற சந்திவெளி பொலிசார் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் வைத்து பஸ்வண்டியை நிறுத்தி அதில் 6 மாணவர்களை கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் சட்டவிரோத ஆர்ப்பாட்டம் மற்றும் பொது வீதி போக்குவரத்துக்கு இடையூறு விளைத்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# திருகோணமலை இலுப்பைக் குளத்தில் 2 புத்தர் சிலைகள்

06-11-2023



திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் திங்கட்கிழமை (06) காலை புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பொரலுகந்த ரஜமஹா விகாரைப்பகுதியில் பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களினால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து ஆளுநரினால் குறித்த கட்டுமானங்களுக்கு தடையுத்தரவு கடந்த ஓகஸ்ட் மாதம் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் தடையுத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் 03.09.2023 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் 09.09.2023 அன்று குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமஹா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. 06-11-2023 காலை குறித்த பகுதியில் இரண்டு புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச்சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# தொழிலதிபர் வாமதேவ தியாகேந்திரன் தனது யாழ்ப்பாண அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு




தொழிலதிபர் வாமதேவ தியாகேந்திரன் அவர்களது யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் "வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு தரப்பு, வைத்தியசாலை ஒன்றுக்கு தொடர்ந்து உதவி செய்வதாக என்னிடம் கூறினார்கள். ஆகையால் நான் பணிப்பாளர் சத்தியமூர்த்தியிடம் இது குறித்து தொலைபேயில் தெரிவித்து, ஒரு வைத்தியசாலையை அவர்களுக்கு இனங்காட்டுமாறு கூறினேன். அவர் தான் கூட்டத்தில் இருப்பதாகவும், பின்னர் தொலைபேசி அழைப்பு மேற்கொள்வதாகவும் கூறினார் ஆனால் அழைப்பு மேற்கொள்ளவில்லை. இதனால் வடக்கு பகுதியில் உள்ள ஒரு வைத்தியசாலைக்கு வந்த நிதி வேறு மாகாணத்திற்கு சென்று விட்டது" என்றார்.


அத்துடன் யாழ்ப்பாண தொழிலதிபர் தியாகேந்திரன் அவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கில்மிஷா, மலையகத்தை சேர்ந்த அஷானி மற்றும் ஜீ தமிழ் தொலைக்காட்சியில் பாடல் நிகழ்ச்சியில் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கு மில்லியன் பல மில்லியன் கணக்கான உதவி வழங்கியமை தொடர்டபாகவும் விளக்கமளித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் "யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கிளினிக் இயங்கி வந்த சுபாஸ் ஹோட்டல் ஆரம்பத்தில் ஓலை கூரையுடன் காணப்பட்டது. அதற்கு மில்லியன் கணக்கிலான நிதி வழங்கி புனரமைப்பு செய்தேன். இப்போது அந்த ஹோட்டலில் கிளினிக் நடைபெறுவதில்லை. அது குத்தகைக்கு எடுக்கப்பட்டது என கூறப்படுகிறது. குத்தகைக்கு எடுத்த விடயம் எனக்கு கூறப்படாமல் அங்கே மில்லியன் கணக்கிலான நிதியை செலவு செய்ய வைத்துவிட்டார்கள்" என்றும்.யாழ்ப்பாண தொழிலதிபர் தியாகேந்திரன் அவர்கள் குற்றஞசாட்டினார்.



கனடிய செய்திகள் Canadian News

# ஒன்றாக இணைந்து எமது மாகாணத்தை பலப்படுத்துவோம் என்கிறார் ஒன்றாரியோ மாகாணத்தின் நிதி அமைச்சர்



ஒன்றாரியோ மாகாணத்தின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் மாகாணத்தின் 2023க்குரிய இலையுதிர் கால வரசெலவுத் திட்ட அறிக்கை வெளிவந்துள்ளது.

ஒன்றாரியோமாகாணத்தின் பொருளாதாரத்தை இன்னும் பலப்படுத்துவதற்கு ஒன்றாக ஒரு வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல் (Building a Strong Ontario Together) என்ற தலைப்பில் ஓர் திடத்தை ஒன்றாரியோ மாகாணத்தின்நிதியமைச்சர் Peter Bethlenfalvy அவர்கள் 2023 ஒன்றாரியோ பொருளாதாரக் கண்ணோட்டம் என்ற தலைப்பில் மற்றும் நிதி மதிப்பாய்வுடன் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார், "எமது ஒன்றாரியோ அரசாங்கம் கூறிய கொள்கைகளை தொடர்ந்து கடைபிடிக்கும் வகையில் இத் திட்டத்தை வடிவமைத்துள்ளார்கள். இந்த திட்டத்தின் முக்கிய இலட்சியங்கள்:

- தற்போதைய பொருளாதார நிச்சயமற்ற தன்மையை நிவர்த்தி செய்யவேண்டும்,
- வளர்ந்து வரும் சமூகங்களில் முக்கியமான உள்கட்டமைப்பை உருவாக்கவேண்டும்,
- எதிர்கால சந்ததியினருக்கு வலுவான நிதி அடித்தளத்தை அமைக்கவேண்டும்.

ஒன்றாறியோ குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டு வருகிறது. கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 500,000 பேர் மாகாணத்திற்கு புதிதாக வந்துள்ளனர். மற்றும் 2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் 170,000 க்கும் அதிகமான புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன" என்றார்.

"ஒன்றாறியோவின் வளர்ச்சி மற்றும் செழுமைக்கு வழி வகுக்கும் வகையில் 2023 க்குரிய இலையுதிர் கால பொருளாதார அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று Markham-Thornhill தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர், லோகன் கணபதி தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் "தற்பொழுதைய வீட்டு சிக்கல்களை தீர்ப்பதற்கும், வீட்டுவசதி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில்சரியான முதலீடுகளுடன் சரிபடுத்துவதற்கு புதிய ஒன்டாரியோ உள்கட்டமைப்பு வங்கி (Ontario Infrastructure Bank) திடத்தை செயல்படுத்தவுள்ளார்கள்.

மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனையை போன்ற உடல் நலம் சார்ந்த திட்டங்களும் செயல்படுத்தப்படுத்திவருகின்றன. எங்கள் அரசங்கத்தின் நோக்கம் அனைவருக்கும் வலுவான, அணுகக்கூடிய எதிர்காலத்தை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என்பது தான். குறிப்பாக நடைபெற இருக்கும் மாற்றங்கள் மூலம் Markham-Thornhill தொகுதியை சேர்ந்த மக்கள் பல பயன்களை பெறஉள்ளார்கள்.

முக்கியமான உள்கட்டமைப்பை விரைவாக்குவதற்கும், இந்த காலகடத்துக்குரிய தொழில்நுட்பத்துடன் உருவாக்குவதற்கும் தேவையான முதலீடுகளை மேலும் ஈர்பத்திற்கும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும், மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் அரசாங்கம் புதிய வழிகளை இந்த திடத்தின் மூலம் அறிமுகப்படுத்துகிறது.

மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள https://logankanapathi.ca/ என்ற இணையத்துக்கு சென்று கண்டறியலாம்.




# கனடா ஸ்காபரோ நகரில் அமையப்போகும் முதலாவது மருத்துவக் கல்லூரி

கனடா ஸ்காபரோ நகரில் முதன்முதலாக மருத்துவக் கல்லூரியை உருவாக்க அடித்தளமிட்டு ஒன்றாரியோ அரசாங்கம் வரலாறு படைத்துள்ளது. கனடாவில் ஒவ்வொரு மாகாணத்திலும் பல மருத்துவக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. ஆனால் தமிழ் மக்களும் ஏனைய பல்லினங்கள் சார்ந்த மக்களும் அதிகளவில் வாழும் ஸ்காபுறோ நகரில் இந்த மருத்துவக் கல்லூரி அமைய இருப்பது பல்லினக் கலாச்சாரத்திற்கு மதிப்பளிக்கும் கனடிய தேசத்திற்கு ஒரு சான்றாக விளங்கவுள்ளது.

ஸ்காபரோ ஒருங்கிணைந்த மருத்துவ சுகாதார கல்லூரியானது (SAMIH) சுகாதார பாதுகாப்பு வல்லுநர்கள், பயிற்சி மருத்துவர்கள், மருத்துவத் தாதிகள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் உடல்நல சிகிச்சை வல்லுநர்கள் ஆகியோரின் பயிற்சிக் களமாக இருக்கும். இம்மருத்துவக் கல்லூரியைப் பற்றி ஒன்றாரியோ மாநில சட்டமன்ற உறுப்பினரும் போக்குவரத்து அமைச்சின் இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள் குறிப்பிடுகையில், "எங்கள் அரசாங்கத்தின் உறுதியான ஆதரவுடன், ஏறத்தாள 200 ஆண்டுகளுக்குப் பின்னர், எங்கள் குடியிருப்பாளர்கள் அனைவரின் நலனுக்காக, ஸ்காபரோவின் சிறந்த சுகாதார பாதுகாப்புக்கான புதிய சகாப்தத்தை தொடங்குகிறோம். இத்திட்டத்தின் மூலம் அடுத்தடுத்து வரும் பல தலைமுறைகளுக்கு சிறந்த மருத்துவ சேவையாற்றுவதற்கான மருத்துவ நிபுணர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.






ரொரன்றோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாகத்தில் இம்மருத்துவ பீடத்திற்கான முதலாம் கட்ட கட்டுமானத் திட்டம் கடந்த திங்கட்கிழமை 06.11.2023 அன்று நிறைவேறியது. இப்பீடத்துக்கான கட்டுமானங்கள் 2026ஆம் ஆண்டில் நிறைவுபெறும். SAMIH மருத்துவக் கல்லூரி செயற்படத் தொடங்கியவுடன், ஓராண்டிற்கு 30 மருத்துவர், 30 மருத்துவ உதவியாளர், 30 மருத்துவத் தாதிகள் பயிற்சியாளர், 40 உடல்நல சிகிச்சை வல்லுநர்கள் மற்றும் 300 உயிரியல் வல்லுநர்கள் இளங்கலை பட்டதாரிகளாக பயிற்றுவிக்கப்படுவார்கள். இது ரொரன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாகத்தின் விரிவாக்கப்பட்ட உயிரியல் திட்டத்தையும் உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# "பெரிய" நடிகர்களின் திரைப்படங்களை சில மாதங்களுக்கு "தள்ளி" வைத்து விட்டு நம்மவர் வெண்திரைப்படங்களை வெற்றியடைச் செய்வோம். நமது கலைஞர்களுக்கும் நல்லாதரவு வழங்குவோம்

மீண்டும் நம்மவர் திரைப்படம் ஒன்று எதிர்வரும் 18-11-2023 மற்றும் 19-11-2023 ஆகிய தினங்களில் கனடாவின் ஸ்காபுறோ நகரின் வுட்சைட் சினிமாவில் நம் தமிழ் மண்ணின் தயாரிப்பாய் திரையிடப்படுகின்றது.




அண்மையில் "பாலை நிலம்" திரைப்படத்தை கண்டு களித்து ஆதரவு வழங்கிய எமது கனடா திரைப்பட ரசிகர்கள் இந்த "யாதும் யாவரும்" என்னும் நம்மவர் திரைப்படத்திற்கும் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்.

அவுஸ்த்திரேலியா வாழ் நமது கலைஞர்களும் இதில் நடித்தும் ஏனைய வழிகளில் பங்கெடுத்தும் உள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அனுமதிச் சீட்டுக்களுக்கு சிவர் - (416) 771-8681

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அதி உயர் நிறைவேற்றுக் குழு கூட்டம் — பல்வேறு விடையங்களுக்கு தீர்மானம் நிறைவேற்றம் — ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

- மன்னார் நிருபர் (05-111-2023)

ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அதி உயர் நிறைவேற்றுக் குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (05-11-2023) காலை 10.30 மணியளவில் மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

ரெலோ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஆரம்பமான குறித்த கூட்டத்தில் ரெலோ கட்சி சார்பாக கட்சியின் செயலாளரும், கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), கட்சியின் ஊடக பேச்சாளர் குருசாமி சுரேன், ஈபி.ஆர்.எல்.எப் கட்சி சார்பாக கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கட்சியின் உப தலைவர் இரா. துரைரட்னம், புளொட் கட்சி சார்பாக கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், கட்சியின் செயலாளர் ஆர். ராகவன், தமிழ் தேசிய கட்சியின் சார்பாக கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி சார்பாக கட்சியின் தலைவர் சிவநாதன் வேந்தன், கட்சியின் பேச்சாளர் கணேசலிங்கம் துளசி, கட்சியின் கிழக்கு மாகாண பொறுப்பாளர் நாகலிங்கம் நகுலேஸ் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.



குறித்த கூட்டத்தில் கட்சி சார்ந்த விடயங்கள், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதோடு, பல்வேறு விடயங்களுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்சியை பலப்படுத்துவது, சமகால பிரச்சினை, ஜனாதிபதி வேட்பாளர் ஆதரவு, மயிலத்தமடு பிரச்சினை, மன்னாரில் காணிகள் அபகரிப்பு செய்யப் படுகின்றமை, மீன் இறக்குமதி, உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு கூட்டம் முடிவடைந்த நிலையில் மாலை 3 மணியளவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகளை வழங்கும் "அற்றார் அழி பசி தீர்த்தல்" என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

"பகிர்ந்துண்டு வாழ்வோம்" என்ற கருப்பொருளில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (05.11.2023) அரியாலையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரரீதியான வருவாயைத் தேடித்தரவல்ல கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு அனைவருக்கும் கறுவா மரக்கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி அனுசரணையை கனடாவின் இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ந. கேதீஸ்வரசிவம் அனுப்பிவைத்துள்ளார்.

கொரோனாப் பேரிடர் காலத்தில் ஏற்பட்ட தொழில் இழப்பைத் தொடர்ந்து தற்போது நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி பொருளாதாரரீதியாக ஏற்கனவே நலிவுற்ற குடும்பங்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கொரானாப் பேரிடர்க்காலத்தில் ஆரம்பித்த "அற்றார் அழி பசி தீர்த்தல்" திட்டத்தைக் கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் கண்பார்வை குறைபாடுடையவர்களுக்கு மூக்கு கண்ணாடி

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் கண்பார்வை குறைபாடுடைய பொலிசாருக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு 04-11-2023 காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

லயன்ஸ் கிளப்பின் அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கண்ணாடி வழங்கும் நிகழ்வில் கண் பரிசோதிக்கப்பட்டு 400ற்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டது,

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ்ப்பாண பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.








# கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்குமார் கலந்துகொண்ட வடக்கு மாகாண ரீதியிலான பரிசளிப்பு விழா!

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் வடக்கு மாகாணம் தழுவிய கலைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் 05-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓவிய கூட வளாகத்தில் இடம்பெற்றிருந்தது.

ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் ஸ்தாபகர் திருமதி. யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்குமார் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ்ஸூம்,

கௌரவ விருந்தினர்களாக சிவபூமி நிலையத் தலைவர் ஆறு திருமுருகன், அமெரிக்கன் சிலோன் தேவாலய தலைவர் தேவகுணானந்தன் அடிகளார், யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செனரத், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் மனோகர், விரிவுரையாளர் பிரசாந், வடமராட்சி வலயக்கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரியதாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# நீதிமன்ற கட்டளையை மதிக்கிறோம்: ஆனால் பொலிசாரின் சட்டவிரோத உத்தரவுகளை மதிக்க மாட்டோம் — சுகாஷ் சீற்றம்

நீதிமன்றக் கட்டளையை மதிக்கத் தயார் ஆனால் பொலிசாரின் சட்டவிரோத உத்தரவுகளுக்குக் கட்டுப்பட முடியாது. போராட்டம் தொடரும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

05-11-2023 தினம் நீதிமன்றம் வழங்கிய கட்டளை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மல்லாகம் நீதவான் நீதிமன்றதினால் சட்டத்தரணி காண்டீபன், சட்டத்தரணி சுகாஷ், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருக்கு எதிராக ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கட்டளையிலே 5.11.2023 மற்றும் 6.11.2023 ஆகிய திகதிகளில் திஸ்ஸ மகா விகாரைக்கு அண்மையில் சொத்துக்களுக்கு அல்லது ஆட்களுக்கோ எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படக் கூடாது என்ற கரிசினையில் பின்வரும் கட்டளை மன்றினால் கட்டளையாக்கப் படுகின்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றவர்கள் திஸ்ஸ விகாரையில் நடைபெறவிருக்கும் கஜினமகா உற்சவத்திற்கு தடைகளோ குழப்பங்களோ ஏற்படுத்தக் கூடாது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசியலமைப்பின் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் வகையில் அமைதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது சொத்துக்களுக்கோ ஆட்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலோ செயல்படக்கூடாது என்று நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

நாங்கள் நீதிமன்றம் கட்டளை பிறப்பிப்பதற்கு முன்பாகவே இந்த விடயங்களை அனுசரித்து தான் போராடிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் நீதிமன்றத்தினுடைய கட்டளையை மதிக்க தயார், ஆனால் இங்கே வந்திருக்கின்ற பொலிசார் நீதிமன்றத்தின் கட்டளைக்கு மேலதிகமாக கோ'ங்களை எழுப்பக் கூடாது என்றும் நாங்கள் எழுப்புகின்ற கோ'ங்கள் சிங்கள மக்களுக்கும் சிங்கள பக்தர்களுக்கும் மன உளைச்சல்களை ஏற்படுத்தக் கூடாது என்றும் புதிதாக சில சட்ட விதிகளை ஏற்படுத்த பார்க்கின்றார்கள். இவற்றுக்கு நாங்கள் அடிபணிய போவது கிடையாது.

நீதிமன்றத்தின் கட்டளையை நாங்கள் மதிக்க தயார். ஆனால் பொலிசாருடைய சட்டவிரோதமான கட்டளைகளை நாங்கள் மதிக்க தயார் இல்லை. ஏனென்றால் இங்கு மன உளைச்சல் ஏற்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கும் காணி உரிமையாளர்களுக்கும்தான். ஏனென்றால் எங்களுடைய மக்களுக்கு சொந்தமான, தமிழர்களுக்கு சொந்தமான காணிகளை அபகரித்து தான் சட்ட விரோத விகாரை கட்டப்பட்டு இருக்கின்றது.

இந்த விகாரையில் கொண்டாட்டங்கள் நடக்கின்றபடியால் எங்களுடைய மக்களுக்கு தான் மன உளைச்சலே தவிர சிங்கள மக்களுக்கு அல்ல. எங்களுடைய காணியை பிடித்து விட்டு நீங்கள் வந்து கொண்டாடும்போது நாங்கள் கோ'ம் எழுப்பினால் உங்களுக்கு மன உளைச்சல் ஏற்படுமானால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை. மீளவும் செல்கின்றோம் நாங்கள் நீதிமன்றத்தினுடைய கட்டளையை மதிக்க தயார் ஆனால் பொலிசாருடைய சட்ட விரோதமான உத்தரவுகளை ஒருபோதும் மதிக்கவும் மாட்டோம் செயல்படுத்தவும் மாட்டோம் போராட்டம் தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உரும்பிராய் கிழக்கு மூத்தோர்கள் கௌரவிப்பு!



கோப்பாய் தேசோதய சங்கத்தின் ஏற்பாட்டில் மூத்தோர்கள் கௌரவிப்பு உரும்பிராயில் இடம் பெற்றது.






கோப்பாய் தேசோதய தலைவர் இ. மயில்வாகனம் தலைமையில் உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான அ. சிவபாலசுந்தரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மூத்தோர்களை கௌரவித்தார்.

இந் நிகழ்வில் தேசோதய நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் திரு. ரமணன், கிராமத்தில் வாழும் மூத்தோர்கள், தேசோதய அமைப்பு பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் கோர விபத்து — இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம் - உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் 08-11-2023 அன்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியில் இருந்து மருதனார்மடம் செல்லும் வீதியில் உரும்பிராய் சந்திரோதயா (ஞானபண்டிதர்) பாடசாலைக்கு அருகாமையில் அன்று மாலை 2மணியளவில் டிப்பர் மற்றும் ஹண்டர் ரக வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

குறித்த சம்பவத்தில் இரு வாகனங்களின் சாரதிகளும் படுகாயமடைந்துள்ளனர். இந்நிலையில் படுகாயமடைந்த சாரதிகள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை விபத்துடன் தொடர்புடைய இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுவதுடன் குறித்த விபத்து காரணமாக அப் பகுதியுடனான போக்குவரத்தும் சிறிது நேரம் தடைப்பட்டது.



பாடசாலைக்கு அருகாமையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் பாடசாலை நிறைவடைந்த நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

அதேவேளை குறித்த விபத்து அதிவேகம் காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக அங்கிருந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


நகரம் தழுவிய வரவுசெலவுத் திட்டம்
பற்றிய தகவல்களுக்கான அமர்வு
எங்களுடன் இணையுங்கள்!
நவம்பர் 28 ஆம் தேதி
மாலை 7 மணிக்கு
MISSISSAUGA
2024 வரவுசெலவுத் திட்டம்
mississauga.ca/budget #SaugaBudget

# ரணில் அரசின் நம்பகத்தன்மை 10% கீழ் வீழ்ச்சி

இலங்கையில் நாடு தழுவியளவில் நடத்தபப்ட்ட ஒரு கருத்துக்கணிப்பில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது தெரியவந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது இலங்கையில் 10மூக்கும் குறைவானவர்களே நம்பிக்கை வைத்துள்ளதாக கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வெரித்தே ஆய்வு அமைப்பு திங்கள்கிழமை (6) வெளியிடப்பட்ட ஆய்வு முடிவில் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் மன நிலை அல்லது "மூட் ஆ.ஃப் தி நேஷன்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட மக்கள் கருத்தறியும் கணக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அங்கீகாரம் ஜூன் மாதத்தில் 21% ஆக இருந்து நவம்பரில் 9% ஆக குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. நான்கு மாதங்களில் அது அரைவாசிக்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதே போன்று கடந்த நான்கு மாதங்களில் அரசின் மீது மக்கள் கொண்டுள்ள திருப்தி என்ற காரணியும் நான்கு மாதங்களில் 12%ல் இருந்து 6% ஆகக் குறைந்துள்ளது.

அதேபோல், பொருளாதார நம்பிக்கைக்கான சுட்டெண்ணும் 62ல் இருந்து 44%க்கு சரிந்துள்ளது.

இந்த கருத்துக்கணிப்பில் அனைத்து அம்சங்களிலும் அரசாங்கத்தின் மீ-தான நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சியும் பின்னடைவும் ஏற்பட்டுள்ளது என்று தரவுகள் கூறுகின்றன.

இந்த "மூட் ஆ.ஃப் தி நேஷன் கருத்துக்கணிப்பு" ஆண்டிற்கு மும்முறை நடத்தப்படுகிறது. இந்தக் கருத்துக்கணிப்பில் பிழை வரம்பு அதிகபட்சமாக 3% க்கும் குறைவாக இருக்கும்படி வரையறுக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்கு நாடு முழுவதிலிருந்தும் 1,029 மக்களிடம் கருத்துக் கேட்டு அது தொகுக்கப்பட்டது. இந்த கருத்துக் கேட்பு கடந்த அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் இடம்பெற்றது.

கணக்கெடுப்பு 1,029 மாதிரி அளவை அடிப்படையாகக் கொண்டது மற்றும் அக்டோபர் 23 கடைசி வாரத்தில் நடத்தப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. தொழிற்சங்கங்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அதிகரித்த வரி காரணமாக மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தொழிற்சங்கங்கள் உட்பட பல்தரப்பினர் அரசை கடுமையாக விமர்சித்துள்ளனர். மேலும் நாட்டில் பணவீக்கம் அதிகரித்து வாழ்க்கைச் செலவினங்கள் தாக்குபிடிக்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது என்று பொதுமக்கள் தொடர்ச்சியாக கவலை வெளியிட்டு வருகின்றனர்.

MORTGAGE
⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா
கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?
மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....
MORTGAGE CLINIC
www.mortgageclinic canada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ரணிலின் தந்திரோபாயம் தமிழர்களை மேலும் பலவீனப்படுத்தும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மீட்பார் என அவர் சார்ந்த வட்டாரங்கள் புகழாராம் சூடினாலும் புள்ளிவிபர ரீதியாக மாற்றம் எதுவும் நிகழவில்லை மாறாக நாட்டின் கடன் அதிகரித்த வண்ணமே உள்ளது. ஆனால் ஜனாதிபதியின் ஒவ்வொரு தீர்மானங்களும் தமிழர்கள் சார்ந்த பிரச்சினைகளை திசை திருப்புவனவாகவும் அதற்கான தீர்வுகளை பலவீனப்படுத்துவதாகவும் வலுவடைந்து வருகின்றது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ரணிலின் எதேத்சதிகார போக்கை இராஜதந்திர ரீதியாக சமநிலைப்படுத்த தமிழர் தரப்பில் ஆளுமையான துணிச்சலான தலைமை தமிழ் கட்சிகளில் இல்லை என்பது வேதனையான விடயம். அத்துடன் தமிழ் புத்தியீவிகள் தரப்பில் பலனமான குரல் இல்லை புலம்பெயர் தரப்பிலும் வறிதாகவே உள்ளது இதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எல்லை இன்றி தமிழர்களின் அபிலாசைகளை கபளீகரம் செய்ய துணிந்துள்ளார் அத்துடன் தன்னை சிங்கள பௌத்த மக்களின் தலைவனாக காட்டவே முயற்சிக்கின்றார் ஜேர்மன் ஊடகத்திற்கு கொடுத்த நேர்காணல் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

தமிழர் தரப்பு பழைய பல்லவிப் போராட்டங்களை அறிவிப்பதும் அதன் மூலம் தமிழ் கட்சித் தலைமைகள் தங்கள் இயலாமையை வெளிப்படுத்துவதும் பலவீனப்பட்டு விரக்தி நிலையில் உள்ள மக்களின் வெறுப்பை அதிகரிப்பவர்களாகவும் மாறி உள்ளனர் இது தமிழ்த் தேசிய இருப்புக்கு சாதகமில்லை மிக ஆபத்தானது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு பதிலாக அதைவிட மேலும் மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கின்றார் ஜனாதிபதி.

எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் தென்னிந்திய மீனவர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக போராடும் வடக்கு மீனவர்களுக்கு தீர்வு காணப்படாமல் தென்னிந்திய மீனவர்கள் வடக்கு கடலில் மீன் பிடியில் ஈடுபட ரணில் அரசாங்கம் அனுமதி வழங்க இருப்பதாக கூறும் அறிவிப்பு மேலும் வடக்கு மீனவர்களை நெருக்கடிக்கு தள்ளும் ஏற்கனவே இருந்த பிரச்சினைக்கு தீர்வு இல்லாமல் இரட்டி மடங்காக்கும்.

தமிழர் தரப்பு மக்கள் ஆணையில் இருந்து ஒரு படி கீழிறங்கி சமஷ்டி தீர்வுக்கு முன்பாக அரசியல் அமைப்பில் உள்ள பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக அமுழ்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவிடம் கோரினர் இதனை எதிர்பாக்காத ரணில் அதற்கும் ஒரு ஆப்பு வைத்தார் பொலிஸ் அதிகாரம் தரமுடியாது என கூறினார் உண்மையில் அரசியல் அமைப்பில் உள்ள அதிகாரத்தை பாராளுமன்ற முடிவு இல்லாமல் நினைத்தவுடன் ஜனாதிபதி தரமாட்டேன் என கூற முடியாது ஆனால் ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகாரி போல செயற்பட்டுள்ளார்.

தமிழர் தாயகத்தில் சட்டவிரோத காணி அபகரிப்பு, விகாரைகள் அமைத்தல், சிங்கள குடியேற்றங்கள் அமைத்தல், மேச்சல் தரைகள் அபகரித்தல் போன்றன கடந்த காலத்தை விட தற்போது வேகமாக நடைபெறுகின்றன.

நிகழ்நிலைக் காப்பு சட்டம் என்ற போர்வையில் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த கொண்டுவர உத்தேசித்துள்ள சட்டம் நாட்டு மக்களுக்கான அடக்குமுறை என பலரும் கூறினாலும் தமிழர்களுக்கு மிக ஆபத்தானது காரணம் சட்டம் நிறைவேறினால் நில அபகரிப்பு, சட்டவிரோத விகாரை அமைப்பு போன்ற வற்றுக்கான மக்கள் போராட்டங்கள் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் போன்றவற்றுக்கு நிரந்தர ஆப்பாகும் மீறினால் சிறைதான் அத்துடன் அரச செயற்பாட்டை விமர்ச்சித்து சமூக ஊடகங்களில் பதிவு செய்தால் பொய்யான செய்தியை பதிவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிறையுடன் கூடிய தண்டனை.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் சகல மக்களின் பிரச்சினைகளையும் நியாயமான முறையில் பார்க்க வேண்டிய ஜனாதிபதி பெரும்பாண்மை சிங்கள மக்களின் தலைவராக தன்னை காண்பிக்க முயற்சிக்கும் சம நேரம் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக மேலும் விரிவு படுத்தி திசை திருப்ப முயற்சிக்கின்றார் இச் செயற்பாடுகள் தொடருமாயின் தமிழ் மக்களின் அபிலாசைகள் மேலும் பலவீனம் அடையும் அபாயம் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்குரிய இணையத்தளம்



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்குரிய 07-11-2023 செவ்வாய்கிழமை அன்று ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

சமய சமூகப் பணிகளில் ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்குரிய இணையத்தள சேவையானது ஆலய தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.






இவ் இணையத்தளச் சேவையின் மூலம் உலகெங்கிலுமுள்ளவர்கள் ஆலயத்தில் இடம்பெறும் பூசைகள், நிகழ்வுகள் மற்றும் சமூக நலத் திட்டம் தொடர்பான முழுமையான விபரங்களை அறிந்துகொள்ள முடிவதுடன் சமூக நலத் திட்டங்கள் தேவைப்படுவோருக்கு உரிய முறையில் திட்டங்கள் சென்றடையவும் வழிவகுக்கும். என்றும் அறியப்படுகின்றது.

# மத வெறியை விதைப்போர் தோல்வியே காண்பர் — சரத் பொன்சேகாவுக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் எச்சரிக்கை

- மன்னார் நிருபர் (7-11-2023)

சீனாவில் உள்ள பௌத்த மக்களின் உதவியுடன் இலங்கையில் வறிய மக்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு 7ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் வங்காலையில் இடம்பெற்றது.








மன்னார் வங்காலையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சீனத் தூதுவர் கீ செங்ஹோங் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற உதவி திட்டம் வழங்கும் நிகழ்வில் சீனத் தூதுவர் கீ செங்ஹோங் கலந்து கொண்டு மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 450 மீனவ குடும்பங்களில் முதல் கட்டமாக 50 மீனவ குடும்பங்களுக்கு வழங்கி வைத்தார்.

மேற்படி உதவித் திட்டம் சீனாவின் பௌத்த சங்கம், இலங்கை மற்றும் சீன பௌத்த நட்புறவுச் சங்கம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மீனவ குடும்பங்கள், தள்ளாடி இராணுவ 541வது படைப்பிரிவு அதிகாரி, அருட்தந்தையர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான புதிய தூதுவர்களாக பொறுப்பேற்றுக்கொண்டோர் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு!

## அபிவிருத்தி, சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு குறித்து கலந்துரையாடல்



இலங்கைக்கான புதிய தூதுவர்களாக பொறுப்பேற்றுக்கொண்ட இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், எகிப்து, இத்தாலி, கியூபா, பங்களாதேஷ், பெல்ஜியம் இராச்சியம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர்கள் மற்றும் பதவி நிலைகளுக்கான பணிப்பாளர்கள் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை 07-11-2023 அன்று சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், கைத்தொழில் பேட்டை ஸ்தாபிப்பு, கனிமத் துறைகளின் அபிவிருத்தி, கூட்டு முயற்சி விவசாய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி போன்ற துறைகளை அவர்கள் நியமிக்கப்பட உள்ள நாடுகளுடன் இணைந்து முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.



அண்மையில் இந்த புதிய தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பணத்தில் போதை விருந்து — சமூக ஆர்வலர்கள் கடும் விசனம்



யாழ்ப்பாண நகர் பகுதியில் அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றில் அண்மையில் களியாட்டம் என்னும் பெயரில் இடம்பெற்ற போதை விருந்து கொண்டாட்டம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பை சேர்ந்த நிறுவனம் ஒன்றே இந்த நிகழ்வுக்கு சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைப்பு விடுத்துள்ளது.

ஆண்களுக்கு நுழைவு சீட்டு 1500 ரூபாய்க்கும் அவர்களுடன் வரும் பெண்களுக்கு 1000 ரூபாய் என விளம்பரம் செய்துள்ளனர்.

அதன் அடிப்படையில் குறித்த தினத்தில் பல இளையோர் நுழைவு சீட்டுக்களை பெற்று பலர் கொண்டாட்டத்திற்கு சென்றுள்ளனர்.

முன்னதாக னுது இசையுடன் ஆரம்பித்த கொண்டாட்டம் பின்னர் மது விருந்துடன் முன்னெடுக்கப்பட அதனை தொடர்ந்து கஞ்சா, ஐஸ் போன்ற போதைப் பொருட்களையும் பாவித்துள்ளனர்.

ஆனால் உணவகத்தில் மதுபானம் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும், அங்கு வந்த பலரும் தம் வசம் உயிர்கொல்லி போதைப்பொருளை வைத்திருந்ததாக விருந்தில் கலந்து கொண்ட சிலர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறான கலாச்சார சீரழிவு நிகழ்வு தொடர்பில் பலரும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறான விருந்து கொண்டாட்டத்தை தெற்கை சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்து வருவதாகவும் இவ்வாறானவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் வரலாற்றுச் சாதனை

- மன்னார் நிருபர் (7-11-2023)




மன் / புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மெய்வல்லுனர் போட்டியில் வரலாற்று சாதனை படைத்துள்ளது.

குறித்த பாடசாலையின் மாணவன் தேசிய ரீதியில் முதலாவது இடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

கடந்த 03ஆம், 04ஆம், 05ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் Junior national athletic championship 2023 போட்டி நடைபெற்றது.

இதன்போது, Under 13 உயரம்பாய்தல் போட்டியில் P. Promiyan 1.52 M உயரத்தினை பாய்ந்து முதலாம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டார்.

பாடசாலைக்கு பெருமை சேர்த்த குறித்த மாணவனுக்கு, பாடசாலை சமூகம் உள்ளிட்ட நலன் விரும்பிகள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.



# மலையக பாடகி அஷானிக்கு உதவி எதுவும் கிடைக்கவில்லை. அந்த சிறுமியின் பெயரை வைத்துக் கொண்டு வேறு சிலர் பயனடைகின்றார்கள்

## தொழிலதிபர் வாமதேவ தியாகேந்திரன் குற்றச்சாட்டுகின்றார்




“மலையக பாடகி அஷானிக்கு அமைச்சர் உட்பட பலர் உதவிகளை செய்வதாக கூறினார்கள். அந்த கிராமத்தையே தத்தெடுப்பதாக ஒருவர் கூறினார். அவர்கள் அனைவரும் உதவி செய்திருந்தால் கோடிக்கணக்கான நிதி அந்த சிறுமிக்கு சேர்ந்திருக்கும். ஆனால் அந்த சிறுமியின் கணக்கினை பரிசீலித்து பார்க்கும் போது அந்தளவுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அந்த வறிய குடும்பத்தைச் சேர்ந்த பாடகியின் பெயரை வைத்துக் கொண்டு வேறு சிலர் பயனடைகின்றார்கள்.

அத்துடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி மீது தொழிலதிபர் வாமதேவ தியாகேந்திரன் அவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

7ம் திகதி செவ்வாய்கிழமை அவரது யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். அவர் இதன்போது கருத்து தெரிவிக்கையில்,

இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அருகே இருந்த சுபாஷ் ஹோட்டலில் ஓலையால் வேய்ந்த இரண்டு கொட்டகைகள் இருந்தன. அது எல்லாவற்றையும் கழற்றி கூரை வேலை, நிலவேலை என அனைத்து வேலைகளையும் செய்து முடித்து, அந்த இடம் பச்சைப் பசேலென இருக்கவேண்டும் என்பதற்காக மில்லியன் கணக்கிலான நிதியை செலவழித்து தோட்டம் எல்லாம் அமைத்தேன்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் சொல்கிறார்கள் அந்த இடம் குத்தகைக்கு எடுத்த இடம் என்றும், தற்போது அந்த இடத்தினை மீளவு விட்டோம் என்று. இதனை நினைக்கும் போது மிகவும் கவலையாக உள்ளது. இதனை பார்க்கும் போது ஏனைய இடங்களுக்கு உதவி செய்யும்போது கூட பயமாக இருக்கிறது.




ஏனென்றால் அங்கும் இப்படியான பிரச்சினைகள் வருமா தெரியாது என்பதால்.

இப்போது அனைத்தையும் விசாரித்து தான் நான் செய்கிறேன். யாழ்ப்பாணம் நாவற்குழியில் பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்துக் கொடுக்கவுள்ளேன். அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பமாகவுள்ளது.

ஒருவர் என்னை வந்து கேட்டார், வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் வழங்குவதற்கு தயாராக உள்ளோம். அதனை நாங்கள் உங்கள் ஊடாக செய்ய விரும்புகின்றோம் என்று. நான் அவர்களுக்கு கூறினேன், நான் யாரிடமும் பணத்தினை வாங்கி செய்வதில்லை ஆனால் அதற்கான ஏற்பாடு செய்து தருகிறேன் என்று. அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி அவர்களுக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு குறித்த விடயத்தை தெரியப்படுத்தினேன். அவர் தான் கூட்டத்தில் இருப்பதாகவும், பின்னர் என்னை தொடர்புகொள்வதாகவும் கூறினார். நான் அவரது அழைப்புக்காக காத்திருந்தேன். ஆனால் அவரிடமிருந்து அழைப்பு வரவில்லை. பின்னர் நான் மட்டக்களப்பில் உள்ள வைத்தியசாலைக்கு அந்த உதவித்திட்டத்தை ஏற்பாடு செய்து வழங்கி விட்டேன். அவர்கள் தொடர்ந்து அந்த வைத்தியசாலைக்கு தான் இனி செய்வார்கள்.

நானும் சுதன் என்ற இளைஞனும் இணைந்து அண்மையில், இந்தியாவில் உள்ள பிரபல தொலைக்காட்சி ஒன்றில் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கில்மிஷா, மலையகத்தை சேர்ந்த அஷானி மற்றும் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றும் தமிழ்நாட்டை சேர்ந்த பிள்ளைகளுக்கு மில்லியன் கணக்கிலான நிதியை வழங்கியுள்ளோம்.

நாங்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டினை என்னுடன் வந்த சுதன் என்பவரே ஒழுங்கமைத்தார். நாங்கள் இலங்கையில் இருந்து வருகின்றோம் என்று தெரிந்ததும் நடுவர்கள் உட்பட அனைவரும் எழுந்து நின்று எங்களுக்கு மரியாதை செலுத்தினார்கள். அது எமக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுத்தது.

மலையக சிறுமி அஷானிக்கு அமைச்சர் உட்பட பலர் உதவிகளை செய்வதாக கூறினார்கள். அந்த கிராமத்தையே தத்தெடுப்பதாக ஒருவர் கூறினார். அவர்கள் அனைவரும் உதவி செய்திருந்தால் கோடிக்கணக்கான நிதி அந்த சிறுமிக்கு சேர்ந்திருக்கும். ஆனால் அந்த சிறுமியின் கணக்கினை பரிசீலித்து பார்க்கும் போது அந்தளவுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அந்த சிறுமியின் பெயரை வைத்துக் கொண்டு வேறு சிலர் பயனடைகின்றார்கள்.

அண்மையில் ஜீ தமிழ் தொலைக்காட்சியில் நடாத்தப்படும் இசை நிகழ்ச்சிக்கு நிகரான நிகழ்ச்சி ஒன்றினை யாழ்ப்பாணம் கலாச்சார மத்திய நிலையத்தில் நடாத்தவுள்ளேன்.

அந்த நிகழ்ச்சியில் அனைத்து வயதுப் பிரிவினரும் கலந்துகொள்ளலாம். இரண்டு சுற்றுக்கள் மூலம் திறமைசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு இறுதியில் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

உதவி தேவையானவர் என்னிடம் வரலாம். உண்மையில் உதவி தேவையுடைய வர்களுக்கு எந்த நேரமும் உதவி செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் கண்காட்சி

வடக்கு கிழக்கு தமிழர்களின் இணைப்பாட்சிக் கோரிக்கையின் தோட்டம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்று தெளிவூட்டல் நிகழ்வும் புதன்கிழமை எட்டாம் திகதி யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமாக உள்ளதாக வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரிவித்தார்.

திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற கண்காட்சி தொடர்பான ஊடகவியலாளருக்கு தெளிவூட்டும் நிகழ்வில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2022 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு 100 நாள் செயல்முறையின் ஓராம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு குறித்த கண்காட்சி இடம்பெறவுள்ளது.



ஆகவே குறித்த கண்காட்சி மக்களின் வரலாற்று தெளிவூட்டல்களுடன் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் இணைபாட்சி தொடர்பான கண்காட்சியில் வடக்கு கிழக்கில் வாழும் பொதுமக்கள் சிவில் செயற்பாட்டாளர்கள் அரசியல் கட்சியின் தலைவர்கள் ஆய்வாளர்கள் கல்விமான்கள் பாதிக்கப்பட்ட மக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# தாக்குதலுக்கு உள்ளான 9 வயது மாணவன் வைத்தியசாலையில், ஆசிரியை கைது

(8-11-2023)

ஒன்பது வயது சிறுவன் பாடசாலை ஆசிரியையால் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பில் மாணவியின் பெற்றோர்கள் பல கல்வி அதிகாரிகளிடமும், பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்திருந்த நிலையில், 08-11-2023 அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் குறித்த ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

06-11-2023 அன்றைய தினம் ஆங்கில பாட ஆசிரியை ஒருவர் மாணவனை தடியினால் அடித்துத் தாக்கியமை தொடர்பில் மாணவனின் பெற்றோர் பொகவந்தலாவ பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாணவனின் பெற்றோர் கல்வி அமைச்சு, மத்திய மாகாண ஆளுநர், மத்திய மாகாண கல்வி திணைக்களம் மற்றும் ஹட்டன் கல்வி வலய கல்விப் பணிமனை ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மாணவன் பொகவந்தலாவை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆங்கில ஆசிரியை கற்பித்தலில் ஈடுபட்டிருந்த போது வகுப்பறையில் மாணவன் தனது நண்பருடன் பேசிக் கொண்டிருந்ததால் ஆசிரியை ஆத்திரமடைந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இலங்கையும் அங்கீகரித்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் அடிப்படையில், பாடசாலையில் ஒழுக்கத்தை பேணுவதில் உடல் ரீதியான தண்டனையிலிருந்து விலகியிருக்க வேண்டுமென்பதோடு,

சிறுவர்களின் மனித மாண்பைப் பாதுகாக்கும் வகையில் பாடசாலை ஒழுக்க நிர்வாகத்தை நடத்துவதற்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் அறிவிக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த வருடம் கல்வி அமைச்சிடம் வலியுறுத்தியிருந்தது.

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடசாலையில் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்கான 12/16 சுற்றறிக்கையை ஆசிரியர்களின் ஓய்வறைகளில் காட்சிப்படுத்த வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

சிறுவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு மாறாக செயற்படும் பாடசாலை முறைமைக்கு எதிராக பாரிய சமூக எதிர்ப்பு எழுந்துள்ளமை குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய, சிறுவர் இம்சை மற்றும் அடிப்படை உரிமை மீறல்களின் கீழ் மாணவர்களை தண்டிக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மகன் விஷம் அருந்திய அதிர்ச்சியில் கோப்பாய் மத்தி பகுதியைச் சேர்ந்த தந்தை உயிரிழப்பு!

கடந்த புதனன்று மகன் ஒருவர் விஷம் அருந்தியால் அதிர்ச்சியடைந்த தந்தை உயிரிழந்துள்ளார். சோனெழு, கோப்பாய் மத்தி பகுதியைச் சேர்ந்த முத்துத்ததம்பி விவேகானந்தம் (வயது 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், உயிரிழந்த நபரின் இரண்டாவது மகன் அன்றையதினம் விஷம் அருந்தியதனால் அதிர்ச்சியில் தந்தையார் மயங்கி விட்டார். இந்நிலையில் அவரை உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

விஷம் அருந்திய மகன் உயிர் தப்பிய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கத்தின் உரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நிறுத்தப்பட்டமை தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தின் அறிக்கை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF JAFFNA TEACHERS' ASSOCIATION
UNIVERSITY OF JAFFNA

சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் அவர்களின் உரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே கடந்த 31-10-2023 அன்று நிறுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த அக்டோபர் 31ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றிலே கலந்து கொண்டு சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் அவர்கள் "நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்" என்ற தலையங்கத்திலே உரையாற்ற இருந்தார்.

இந்த உரையாடல் இறுதி நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பிரிவினரின் நெருக்கதலின் காரணமாக கைவிடப்பட்டது. இதற்கு மாணவர்களினால் சொல்லப்பட்ட காரணம் சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் தென்னிலங்கையில் ஒரு நிகழ்ச்சியிலே பேசும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பாசிஸ அமைப்பு என விபரித்தமையே ஆகும்.

ஒருவர் வெளியிட்ட தனிப்பட அரசியற் கருத்தின் அடிப்படையில் அவரைப் பல்கலைக்கழகத்திலே பேச அனுமதிக்கக் கூடாது எனப் பல்கலைக்கழக மாணவர்கள் நிருவாகத்துக்கு நெருக்குவாரம் கொடுத்தமை மிகவும் தவறான ஒரு செயல் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இந்த அறிக்கையில் பதிவிடுகிறது.

மாணவர்களின் நெருக்குவாரத்துக்குப் பல்கலைக்கழக நிருவாகம் பணிந்து சென்றமையும் ஒரு தவறான செயலாகும். எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெறாது இருப்பதனை மாணவர்களும், நிருவாகமும் உறுதி செய்வது அவசியம்.

பல்கலைக்கழகம் என்பது அறிவுசார் கருத்துப் பரிமாற்றங்களுக்குரிய ஒரு களம். வெவ்வேறு பட்ட அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் எந்தத் தடைகளும் இல்லாத வகையிலே உரையாடுவதற்கும், விவாதிப்பதற்கும் உரிய வெளியும், சுதந்திரமும் பல்கலைக்கழகத்தினுள் இருப்பது பல்கலைக்கழகத்தின் அறிவு சார் செயன்முறைகளுக்கு மிகவும் அவசியம்.

இலங்கை அரசினதும், அதனது இராணுவக் கட்டமைப்பினதும் கடுமையான கண்காணிப்புக்கும், கட்டுப்படுத்தல்களுக்கும் உள்ளாகி இருக்கும் எமது பல்கலைக்கழகத்தில், மாணவர்கள் தமது அரசியற் கருத்துக்களை சுயாதீனமாக முன்வைப்பதற்கும், நினைவேந்தற் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், போராட்டங்களிலே ஈடுபடுவதற்கும் எதிராகப் பல தடைகள் ஏற்படுத்தப்படுவதனை நாம் அறிவோம்.

இதன் மிக அண்மைய வடிவத்தினை இந்த வாரம் மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரத்திலே ஜனநாயக ரீதியாகப் போராடிய எமது பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்திலே நாம் கண்டோம்.

அரசினாலும், இராணுவத்தினாலும் அச்சுறுத்தலினையும், கட்டுப்படுத்தலினையும் எதிர்நோக்கும் எமது பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினைச் சேர்ந்த ஒரு பிரிவினரே, சுவாஸ்திகா அருளிங்கம் அவர்கள் பங்கேற்க இருந்த நிகழ்வு தொடர்பிலே ஒரு கட்டுப்படுத்தற் செயன்முறையில் ஈடுபட்டமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தினையும், நம்பிக்கையீனத்தினையும், கவலையினையும் அளிக்கிறது. இது ஒரு தவறான முன்னுதாரணத்தினை ஏற்படுத்திவிடுமோ என நாம் அச்சமடைகிறோம் என்றுள்ளது.

# மன்னாரில் பயன் இன்றி செயல்படும் வீதி அபிவிருத்தி அதிகார சபை,வீதி அபிவிருத்தி திணைக்களம்

## ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் பொய்களை தெரிவிப்பதாக மக்கள் விசனம்



**- மன்னார் நிருபர் (09.11.2023)**

மன்னாரில் அண்மைய வருடங்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் உட்பட நகரசபையினால் மேற்கொள்ளப்பட்ட பல வீதி அமைக்கும் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாது முன்பு இருந்த நிலயை விட மோசமான நிலையில் காணப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களங்கள் மன்னாரில் எந்த பிரயோசனமும் இன்றி செயற்படுவதாகவும் அதில் பணியாற்றும் அதிகாரிகள் தங்கள் பணிகளை ஒழுங்காக நிறைவேற்றாது சம்பளங்களை மட்டும் பெற்றுக்கொண்டு இருப்பதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நகர் பகுதியில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை -- தாழ்வு பாடு வீதி, மன்னார் தலைமன்னார் வீதி, சாந்திபுரம் வீதி, கோந்தைபிட்டி வீதி, தபாலகம் தொடக்கம் மன்னார் பிரதான புகையிரத நிலைய வீதி, எழுத்தூர் தரவான் கோட்டை வீதி, மன்னார் வவுனியா வீதி என எந்த வீதிகளும் ஒழுங்கான முறையில் பூரணப்படுத்த படாமலும் அமைக்கப்படாமல் காணப்படுவதாக அவ் வீதிகளை பயன்படுத்தும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த அதிகார சபைகளின் செயற்பாடு சம்பந்தமாக மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பொது மக்களால் கேள்விகள் எழுப்பப்படும் போது அக் கூட்டங்களில் வேலைகள் நடைபெறுவதாகவும் நிதி கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் வேலை நடைபெறும் என பொய் வாக்குறுதிகளை தெரிவிப்பதாகவும் ஆனால் கடைசி வரை அவ் செயற்திட்டங்கள் இடம் பெறுவதில்லை எனவும் அதிகாரிகள் மக்களின் கேள்விகளுக்கு எவ்வாறு பதில் வழங்கி தப்பிக்கலாம் என திட்டமிட்டு கூட்டங்களில் கலந்து கொள்வதாகவும் பொதுமக்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் பல வீதிகளில் பயணிக்க முடியாத நிலையே காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் குறித்த திணைக்களங்களின் மாகாண பணிப்பாளர்களோ அரச எரிபொருட்களில் அரச சொகுசு வாகனங்களில் திரிகிறார்களே தவிர மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எந்த ஒரு அக்கரையும் செலுத்துவதாக இல்லை என குற்றம் சுமத்துவதுடன் விரைவில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மக்களின் வரிப்பணத்தில் பெறும் சம்பளத்திற்கு நியாயமாக பூரணப் படுத்தாது,பயன்படுத்த முடியாத பாதைகளை புணர் நிர்மாணம் செய்ய முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.





மன்னாரில் பல மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களங்களினால் அமைக்கப்பட்ட பல வீதிகள் உரிய விதமாக அமைக்கப்படாமலும், பூரணப்படுத்தப்படாமலும், ஒழுங்கான முறையில் கண்காணிக்கப்படாமலும் வெடிப்புக்களுடன் நீர் தேங்கிய நிலையில் காணப்படுகின்ற நிலையில் குறித்த வேலைத்திட்டங்களை மேற்கொண்ட ஒப்பந்த நிறுவனக்கள் செயற்திட்டங்களை பூரணப்படுத்தாமலேயே நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிகழ்நிலை காப்புச்சட்டம் நிறைவேறினால் அனைவரும் சாப்பிட மட்டுமே வாய் திறக்க முடியும் — சபா குகதாஸ்

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் கொடுத்த கட்டளையை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார் சபை முதல்வர் அதன் அடிப்படையில் உத்தேச நிகழ் நிலை காப்புச் சட்டத்தில் காணப்படும் பல சரத்துக்கள் எவ்வாறு அரசியலமைப்புக்கு அமைவாக மாற்றப்பட வேண்டும் என்றும் அத்துடன் மூன்றில் இரண்டு பெரும்பாண்மையுடன் முழுமையாக நிறைவேற்ற முடியும் என்றும் அவ்வாறு முடியாவிட்டால் நீதிமன்றம் குறிப்பிட்ட விடையங்களை மாற்றியமைத்து சாதாரண பெரும்பாண்மையுடன் நிறைவேற்ற முடியும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சட்டத்திற்குஎதிரான மனுக்கள் யாவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது, தற்போதைய அரசாங்கம் தமக்கு எதிரான மக்களின் கருத்துக்களை மற்றும் மக்கள் போராட்டங்களை கண்டு மிக அஞ்சுகின்றது காரணம் அடுத்து வர இருக்கும் தேர்தலை இலக்காக கொண்டு ஆட்சி தொடர்பாக சாதாரண பெரும்பாண்மை மக்களுக்கு சமூக ஊடகங்களினால் உடனுக்குடன் அரசாங்கததின் பலவீனங்கள் வெளிக் கொண்டு வரப்படுகின்றன இதனால் தமக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவதை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதால் சமூகவலைத் தளங்களை அடக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை கொண்டுவருகின்றனர். இது ஊடக அடக்குமுறைக்கு அப்பால் மக்களின் ஜனநாயக குரல் வளையை நசுக்கி அரச சர்வாதிகாரத்தை மேலோங்கச் செய்யும்.

நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேறினால் நாட்டு மக்களும் சரி ஆளும் கட்சி தவிர்ந்த எதிர்க்கட்சிகள் அனைவரும் சாப்பிடுவதற்கு மட்டுமே வாயை திறக்கவும் கையை அசைக்கவும் முடியும் மாறாக அரசின் தவறுகளை விமர்சித்தால் சிறைச் தண்டனையுடன் கூடிய சொத்துக்களை பறி கொடுத்தல் மற்றும் தண்டப்பணம் சொலுத்துதல் போன்றவற்றை எதிர் கொள்ள நேரிடும்.

இலங்கைத் தீவு ஒரு ஜனநாயக சோசலிச குடியரசு என்ற பெயரில் மக்களின் கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்தை அடக்கும் கொடூர சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றுவதை தடுக்க மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

பெரும்பான்மை சிங்கள மக்களை விட ஏனைய இனங்களுக்கு குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு பாரிய ஆபத்து காத்திருக்கின்றது தமிழர்களின் தாயகத்தில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஆயுதங்கள் இல்லாமல் இனத்தின் இருப்பை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகளை எதிர்த்து குரல் கொடுக்கும் நிலையையும் இழக்கும் அபாயம் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணம் பழைய கச்சேரி கட்டடமும் சீனா வசமாகின்றதா?

யாழ்ப்பாணம் பழைய கச்சேரி கட்டிடத்தை சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் இன்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து பல்வேறு சந்திப்பில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பழைய கச்சேரியை சீன நாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக கடந்த காலங்களில் குற்றச்சாட்டு எழுந்த நிலையில் சீனதூதுவர் பழைய கச்சேரியை பார்வையிட்டமை பாரிய சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

# கனடா தமிழ்க் கவிஞர் கழகம் நடத்திய 'கவிச்சரம்' நூல் வெளியீடும் 'பாவலர்' விருது வழங்கும்...



இவ்வருடத்திற்குரிய 'பாவலர்' விருது பெற்ற பின்வரும் ஐந்து கவிஞர்கள் பெருமைக்குரிய வகையில் கௌரவிக்கப்பெற்றனர்.
கவிஞர்கள் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன். சந்திரன் வேலாயுதபிள்ளை. மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை. சரவாம்பிகை வாசுதேவன். சுகந்தி மார்க்கண்டு ஆகியோரே விருதுகள் பெற்றவர்களாவார்கள்
பேராசிரியர் இ. பாலசுந்தரம். 'உதயன் லோகேந்திரலிங்கம். மற்றும் எழுத்தாளர் அகில் சாம்பசிவம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பாவலர்கள் அகணி சுரேஸ வரவேற்புரையையும் மாவிலி மைந்தன் சண்முகராஜா சிறப்புரையும் 'கவிச்சரம்' நூல் வெளியீட்டு உரையை பாவலர் க. குமரகுருவும் வழங்கினார்கள்.

# Exiled Eelam Tamil's Story Speaks About "Oppressive Regime" in Sri Lanka

The story of a father and daughter duo finds a place in an anthology of 'Stories written by Writers in Exile' released under the title "The Uncaged Voice". Ilamaran Nagarasa aka Maran is a freelance journalist, human rights activist, and refugee advocate from Eelam and his daughter Dishaly Ilamaran is a student at Carleton University in Canada pursuing a dual degree in Journalism and Law.

Both the father and daughter have a passion for storytelling and legal advocacy and their story is titled "Maran's Unknown Journey"

Now based in Canada, Maran was imprisoned in Sri Lanka for over a year for his alleged association with Tamil Tigers. Dishaly is committed to weaving together her cultural roots and academic pursuits in her journey of learning and growth according to the publishers.

The fifteen writers in exile, whose stories appear in "The Uncaged Voices" continue to write, sharing both the suppressed truths of the past and the hopes they have for the future in Canada, their chosen place of asylum says Keith Leckie the Editor of the book.

"Through first-person essays and short stories, the contributors to The Uncaged Voice share their brutal yet heart-rending tales of fleeing the oppressive regimes of their homelands, where freedom of expression and the press is an ideal, not a reality, and where totalitarian forces attempt to subjugate, if not annihilate, all forms of dissension".

The writers include war correspondents reporting across dangerous "no-go zones", female journalists, and independent newspaper editors among others.

With introductions by editor Keith Ross Leckie and Mary Jo Leddy, The Uncaged Voice tells often-silenced stories, not only of censorship and persecution but also of the strength and resilience of those unwavering in their fight for the freedom of expression. The book was released in Canada in October end this year.

A story by Savitri, a freelance journalist and author from the south Indian state of Kerala too finds a place in the collection. She left India in 2010 unable to adapt to the patriarchal tendencies and conservatism of Indian society.

All the essays and short stories in the book are first-person experiences the writers allegedly suffered in their home countries by oppressive regimes.

The anthology of the 15 stories are written by Aaron Berhane (Eritrea), Gezahegn Mekonnen Demissie (Ethiopia), Alexander Duarte (Venezuela), Ava Homa (Kurdistan), Abdulrahman Matar (Syria), Ilamaran Nagarasa (Sri Lanka), Luis Horacio Nájera (México), Kiran Nazish (Pakistan), Pedro A. Restrepo (Colombia), Maria Saba (Iran), Kaziwa Salih (Kurdistan), Mahdi Saremifar (Iran), Bilal Sarwary (Afghanistan), Savithri (India), and Arzu Yildiz (Turkey).







என்றென்றும்
உங்கள்
இல்லங்களிலும்
உள்ளங்களிலும்
மகிழ்ச்சி
பொங்க

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

Wishing everyone a very
HAPPY
Diwali



**Raymond Cho**
**MPP - Scarborough North**

UT INCEPIT FIDELIS SIC PERMANET

**Constituency Office**
**Unit B, 4559 Sheppard Ave E**
**Scarborough, ON M1S 1V3**
**(416) 297-5040 | raymond.choco@pc.ola.org**
**www.raymondcho.ca**






**சிவத்திரு சிவயோக சுவாமிகளின் திருவடி வழிபாடும் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் 22வது ஆண்டு குருபூசையும்.**

**குருபரன் திருத்தாள் வாழ்க!**

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இலான் நல்லூர்க்
குருவாக வந்து குறைதீர்த்தான் - வருவாரை
வையாமல் வைது வரம் தருவான் நாமெல்லாம்
உய்யாமல் உய்வோம் உவந்து"

சிவத்திரு சிவயோக சுவாமிகளின் திருவடி வழிபாடும் ஹாவாய் (Hawaii) குவைப்பதி இறைவன் கோவில், சைவ சித்தாந்த ஆதீனம் ஆகியவற்றின் ஸ்தாபகரும் சிவயோக சுவாமிகளின் முதன்மை சீடருமாகிய சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் 22வது ஆண்டு மகா சமாதிக் குருபூசையும் எதிர்வரும் 12ம் திகதி(12-11-2023) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு, 42,TUXEDO COURT(MARKHAM/401) SCARBOROUGHவில் அமைந்துள்ள **"சங்கமம்"** (SANKKAMAM BANQUET HALL) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**தொடர்புகளுக்கு : 416-844-8883,905-796-7364**



ஈழமுரசு

ஈழமுரசும் கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும் தமிழீழத் தேசியத்
தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின்

69



தலைவன்
பிறந்தநாள்
அதுவே
தமிழன்
நிமிர்ந்த நாள்!

வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்

அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
இருப்பாய் தமிழா நெருப்பாய்!

2023 நவம்பர் 26 ஞாயிறு
மாலை 5 மணி

இடம்:

**TORONTO**
METROPOLITAN CENTRE
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)

**MONTREAL**
Le Château Royal
3500 Bd du Souvenir,
Lavel, Montreal
QC H7V 1X2

ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்

Toronto (647) 657-8566, (647) 783-3466, (587) 982-8829, (437) 224 7923
Montreal 438-483-1157

# International Watchdog Urges Sri Lanka to Stop Harassment of Tamil Journalists

Journalists working in Sri Lanka should be allowed to work without fear of reprisals and state oppression, New York-based Committee to Protect Journalists (CPJ) has urged to government.

CPJ has called upon the Sri Lankan government to immediately drop their investigations into two Tamil journalists for their reporting.

"Sri Lankan authorities must immediately cease all forms of reprisal against journalists Punniyamoorthy Sasikaran and Valasingham Krishnakumar and ensure they may report freely," said CPJ Asia Program Coordinator Beh Lih Yi. "The government must put an end to the long-standing pattern of relentless harassment targeting Tamil journalists covering human rights violations impacting their community."

These two Tamil journalists were separately interrogated by the Sri Lankan police at their homes in Batticaloa for reporting a protest on the 8th of October. Twenty days later a police officer went to their home for inquiry CPJ says quoting Journalists for Democracy an advocacy group.

The two freelance Tamil journalists were reporting a protest by farmers whose grazing lands were forcefully occupied by the Sinhala people with state support starving them out of their livelihood. The cattle farmers' protest is continuing for more than two months now Sasikaran and Krishnakumar were at the scene of the protest for newsgathering which also coincided with visit of the President Ranil Wickremesinghe's visit to Batticaloa. The journalist's duo was reporting for both local media and abroad. The police officer questioned both about their personal and journalistic backgrounds and activities and what occurred at the protests according to the CPJ.

After interrogation, the Police officer forced the two Tamil journalists to sign written statements of their testimony and informed them they had been named in a police criminal investigation in relation to the protests along with several farmers, politicians, and activists and were due to appear at the Eravur Magistrate Court on November 17.

However, CPJ says neither Sasikaran nor Krishnakumar had received a written summons or a copy of a police report detailing the precise allegations against them as of November 8.

CPJ in their statement says even after the war ended in 2009, ethnic tensions persist between the majority Sinhalese and the minority Tamil people.

"Tamils have experienced systematic discrimination in the country".

On 4th November both Tamil journalists received a court order directing them to hand over their 'unedited video footage' of a Buddhist monk threatening to "cut Tamils into pieces and provide a statement to the police with regard to their separate investigation into the activities of the monk.

Subsequently, on November 7, Sasikaran and Krishnakumar appeared at the Batticaloa Divisional Crime Detective Bureau and provided the footage to police, who questioned them for one hour each about their coverage and which media outlets they shared their videos with, CPJ said in their statement which demanded to immediately drop the investigations against them.

Sasikaran and Krishnakumar told CPJ that they believed the latest incident was another form of harassment intended to muzzle their reporting on farmers and marginalized communities.

The state police have not responded to the CPJ according to them.

On August 22, a mob of around 50 Sinhalese men held Krishnakumar and two other journalists captive while they were reporting on alleged state-backed land encroachments in Batticaloa.

"No suspects had been accountable for this incident as of November 8," Krishnakumar told the CPJ.

# Australia Reiterates 'No Asylum' to those Coming by Boats

A Senior Australian Police officer has reiterated their government's policy of zero tolerance for those coming by boats to their country and warned local Sri Lankans against venturing into such activities and falling prey to Human traffickers.

A senior Police officer of the Australian Federal Police, Detective Superintendent Robert Wilson issued this warning While participating as the chief guest at the inauguration of the new police outpost of Sri Lanka's 'terror police' - the Criminal Investigation Department (CID) to curb Human trafficking, and marine offences centering around the coastal belt in Mannar district on Thursday (26) in the district. The outpost is apparently a surveillance point, trying to check in on people trying to flee the country either due to persecution or driven by loss of livelihood.

"The main aim here is to stop people getting on boats to travel to Australia, as there We have a zero-chance policy of getting into Australia or anywhere else. We are working with the Sri Lankan Police and other authorities here to stop them getting on to the boats, and when someone gets out, we stop the boats, and people are brought back to Sri Lanka, So, no one gets into Australia".

The 'zero-chance policy' of the Australian government has been commented on as highly controversial and criticized severely by the United Nations and Human Rights groups.

Pushing back people who try to escape persecution in their countries has been dubbed as 'cruel and deadly'.

Australia has pushed back close to 1,000 people in the last decade. The Aussie move came in for sharp criticism from the UN Human Rights Council Special Rapporteur on the Human Rights of Migrants.

In his report to the 47th session of the UN Human Rights Council in 2021, the Special Rapporteur, Chilean Lawyer, Felipe Gonzalez Morales strongly deplored the practice of turning back people who have pledged their lives to escape persecution in their home countries.

"Forcibly pushing back migrant boats is a 'cruel and deadly practice' that violates international law, and risks sending people back to death, torture or persecution".

In his report, he further warned countries that militarized borders and boat interdictions were contributing to deaths, not saving lives.

However, the Australian policy of pushing back people trying to arrive there by boat is continuing.

Now, the senior Australian police officer has parroted his government's message with a clear and stern suggestion not to embark on such a journey with the hope of reaching Australia and any such effort would not be fruitful and eventually they would be sent back to Sri Lanka.

While interacting with the local fishermen community in Mannar after the inauguration of the police station, he listened to their side of the story of why people embark on a dangerous journey due to loss of livelihood and continued economic challenges.

Locals pointed out to the Australian police official the sea level is higher than the land level by two feet in that area. Mining of Ilmenite from the shores of Mannar by an Australian company was also brought to the notice of Robert Wilson

"An Australian mining company 'Titanium Sands Limited' is mining Ilmenite from here. Ilmenite sand is one of the biggest assets of this island. 53.3 million tons of sand are here. Because of that Ilmenite mining by the Australian company, local fishermen are prohibited from going to that area. People are against the project and they are protesting" locals told the Aussie police officer.

Titanium Sands Ltd holds five exploration licenses for heavy mineral sands located in North West Sri Lanka on Mannar Island and the adjacent mainland coast.

Mannar fishermen also point towards to 100 MW Wind Power project coming up here.

"A lot of fishermen have lost their livelihood. That's why they are trying to migrate to some European countries or Australia".

Local fishermen say they are against development projects.

"Without development projects, we were living peacefully earlier. After the foreign investment development projects, we can't live in freedom. So, some people are doing smuggling. We can't live in this area, so, we are migrating to Australia or other places".

Residents of Mannar coastal belt feel foreign investments are chasing them away from their daily livelihoods and their access to areas granted to companies like the Australian mining company 'Titanium Sands Limited' is being restricted.

Apart from sand mining by the Australian Company Manar fishermen also appraised the Aussie cop about their loss of livelihood by the Indian fishermen crossing the International Maritime Boundary Line and entering the Sri Lankan coastal waters and returning with a huge catch of marine products.

Mannar fishermen also expressed their inability to compete with their South Indian counterparts who use high-power boats with enhanced fishing gear compared to their impoverished ones.

The Indian trawlers enter the territorial waters of Sri Lanka on Monday, Wednesday, and Saturday night, which can be clearly seen from the Pesalai coast, the local fisherman shared with the cop from the Australian Federal Police.

"I will raise your concerns with our High Commissioner in Colombo" Robert Wilson responded after listening to them.

Australian National News Broadcaster ABC News in their investigative report has exposed the Australian Federal Police providing equipment and assistance to the Sri Lankan CID, which has been continuously accused of kidnapping and torture.

"The AFP was central to the Government's attempts to deal with the influx of asylum seekers fleeing the civil war in Sri Lanka.

In mid-2009 it struck a deal with Sri Lankan police to provide equipment and training to help Sri Lanka disrupt people-smuggling networks".

The investigation by ABC in 2015 revealed over five years the AFP had given the Sri Lanka CID and other divisions of its police everything from furniture, and office equipment to high-tech intelligence programs. That included the 'Jade Investigator software program which allows the Sri Lankan police to easily link photos, videos, intelligence reports, and other evidence together.

Funded by the Australian Federal Police to the tune of 15 million LKR, the new police outpost or the Sri Lanka CID surveillance center was inaugurated at Konthaipitti and handed over formally to the Sri Lanka Police.

Apart from the Senior Australian Police officer Robert Wilson who was the chief guest, DIG, of the Criminal Investigation Department of Sri Lanka Police Prasad Ranasinghe, DIG of Vanni area Wijesekere, Director of Prevention against Human Traffic and Marine Crimes, Senior SSP of Mannar Chandrapala and officials from the Australian High Commission participated in the inauguration.

# நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் போதாது

இலங்கை செய்திகள் Sri Lanka News

## நானாட்டான் பிரதேச செயலாளர் மா. ஸ்ரீஸ்கந்த குமார் தெரிவிப்பு



- மன்னார் நிருபர் (08.11.2023)

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் தற்போது காணாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே - மாற்று வழியை அமைக்க வேண்டிய தேவை உள்ளது என நானாட்டான் பிரதேச செயலாளர் மா.ஸ்ரீஸ்கந்த குமார் தெரிவித்துள்ளார்.

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலத்தை அடையாளப்படுத்துவது தொடர்பான பிரச்சனை நீண்டகாலமாக இழுபறி நிலையில் உள்ள நிலையில் குறித்த விடயம் குறித்து பிரதேச செயலாளரிடம் 8-11-2023 அன்று தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நானாட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கால்நடைகளை மேய்ச்சலுக்காக மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பகுதிகளுக்கு கொண்டு செல்வது சம்பந்தமான கூட்டம் செவ்வாய்க்கிழமை (7) நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மற்றும் பிரதிநிதிகளும் கால்நடை வளர்ப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

கால் நடைகளை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள "பெருவெளி" பகுதிக்கு கொண்டு செல்வது தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக நானாட்டான் பிரதேச செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், இலுப்பக்கடவை கமக்கார அமைப்பின் தலைவர் போன்றவர்களுடன் கலந்துரையாடப்பட்டு குறித்த விடயங்கள் தெளிவு படுத்தப்பட்ட பின்னர் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் நானாட்டான் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை தெரிவு செய்வது தொடர்பாக கடந்த மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கட்டுக்கரை குளத்தினுள் அடையாளம் காணப்பட்ட புல்லறுத்தான் கண்டல் என்று அழைக்கப்படுகின்ற 350 ஏக்கர் விஸ்தீரணம் உடைய நிலப்பகுதி ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைபடத்தின் உள்ளே முருங்கன் ரயில் நிலையமும் அதனுடைய தண்டவாள பகுதிகளும் புகையிரத விடுதிகளும் விதைப் பண்ணையும் ஏனைய பிரதேசங்களும் அடங்குகிறது. அத்தோடு கட்டுக்கரை குளத்தின் நீரைக் கொண்டு வருகின்ற உள் வரத்து வாய்க்காலும் காணப்படுகின்றது.

இவற்றைத் தவிர அங்கு மேய்ச்சல் தரவை க்கு பொருத்தமான பிரதேசமாக 150 தொடக்கம் 200 வரையான ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் பட்டுள்ளது. இந்த 150 ஏக்கர் தொடக்கம் 200 வரையான நிலப்பரப்பானது நானாட்டான் பிரதேசத்தில் காணப்படுகின்ற 25,000 திற்கும் மேற்பட்ட கால் நடைகளுக்கும் 2500 எருமை மாடுகளுக்கும் போதுமானதாக அமையாது.

அத்தோடு வருங் காலத்திலே கட்டுக்கரை குளத்தின் கட்டு அமைப்பானது இரண்டு அடிக்கு உயர்த்தப்படும் போது அதனுடைய நீர் பிடிப்பினுடைய அளவு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எனவே கட்டுக்கரைக்குள் தற்பொழுது கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற 150 தொடக்கம் 200 வரையான ஏக்கர் நிலப்பரப்பு மேலும் குறைந்து போவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது.

நீர்ப்பாசன பணிப்பாளரின் கருத்துப்படி கட்டுக்கரை குளத்தின் உச்ச நீர்மட்ட எல்லையில் இருந்து 100 மீட்டருக்கு அப்பால் கால் நடைகளை வைத்துக் கொள்வது தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்ற கருத்துக்கு அமைவாக இந்த கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் இங்குள்ள கால்நடைகளுக்கான வேறு மேய்ச்சல் தரைகளை எங்களால் கண்டுபிடிக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஏனென்றால் நானாட்டான் பிரதேச செயலக பிரிவு மன்னார் மாவட்டத்தினுடைய மொத்த நிலப்பரப்பில் ஆறு சதவீதமாக மட்டுமே இருக்கிறது.

எனவே இந்த ஆறு சதவீதமான நிலப்பரப்பின் உள்ளேயே வங்காலை பறவைகள் சரணாலயம், கட்டுக்கரை குளத்தில் உள்ளே இருக்கின்ற பறவைகள் சரணாலயம் கண்டல் உற்பத்தி காடுகள் இவை எல்லாமே இதற்குள் காணப்படுகிறது.

ஆகவே அரச காணி என்று எந்த ஒரு காணிகளும் எங்களால் அடையாளம் காண முடியவில்லை. இவ்வாறு அடையாளம் கண்டாலும் அவை 10 பேர்ச்சுக்கு உள்ளாக பொது மக்களின் வாழ்விடங்களுக்கு உள்ளேயே இருக்கிறது. அதனால் எங்களுடைய கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை களை பெற்றுக் கொள்வதற்காக வேறு மாற்று வழிகளை நாட வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

எங்களுக்கு கிடைக்கப்பெற்று இருக்கின்ற மேய்ச்சல் தரைகளுக்கு மேலதிகமாக மேய்ச்சல் தரவை களை தேடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மேய்ச்சல் தரவைக்கு பொறுப்பான திணைக்களம் விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகும். கால்நடைகள் தொடர்பான விடயங்களுக்கு குறித்த திணைக்களம் பொறுப்பு கூற வேண்டும்.

அந்த வகையில் விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்கத்தினரோடு சேர்ந்து அனைவரும் இதற்கான மாற்று வழிகளை அமைக்க வேண்டும்.

கடந்த சிறுபோகத்தில் கட்டுக்கரை குளத்தின் கீழ் இருக்கும் 33,000 ஏக்கர் காணியில் பத்து ஏக்கருக்கு ஒன்று என்ற விகிதத்தில் 3000 ஏக்கரில் சிறு போகத்தை மேற் கொண்டிருந்தோம். இந்த சிறுபோகம் யாவும் கட்டுக்கரை குளத்தின் கீழ் குளத்துக்கு நீர் வருகின்ற நீரேந்து பகுதியிலேயே அதாவது புலவு என்ற சொல்லப்படுகின்ற பகுதியில் வழங்கப்பட்டிருந்தது.

காலப் போக்கத்திலே புலவு செய்கை மேற் கொள்ளப்படாத படியினால் பொருத்தமான நீர் பிடிப்பற்ற புலவுகளை அடையாளம் கண்டு அந்தப் பகுதிகளில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளாக அடையாளப் படுத்துவதோடு அதற்கும் மேல் அதிகமாக கால்நடை வளர்ப்பவர்களும் விவசாயிகளும் ஒருவராக இருப்பதனால் இந்த கால்நடைகளுக்கான தீவனங்களை ஒதுக்கப்பட்ட விவசாய காணிகளில் வளர்த்தெடுப்பதன் ஊடாகவும் அதே நேரத்தில் விவசாய அறுவடையின் பின்னர் கிடைக்கும் வைக்கோல்களை பாதுகாத்து சேமித்து வைப்பதன் ஊடாகவும் ஏனைய மாற்று வழிகளில் கால்நடைகளுக்கான தீவனத்தை உற்பத்தி செய்வதன் ஊடாகவும் கால்நடைகளுக்கான தீவனங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

நானாட்டான் பகுதியில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை 150 தொடக்கம் 200 ஏக்கர் வரை அடையாளம் கண்டால் கூட இதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டு உள்ள மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெருவெளிப் பகுதியை பொருத்தமான நடவடிக்கைகள் ஊடாக கால் நடைகளுக்கான மேய்ச்சல் நிலமாக பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் காணப்படுகிறது.

இதில் பல்வேறு தரப்பினர் உடைய இணக்கப்பாட்டில் சரியான முறையில் இவை மேற்கொள்ளப்பட வேண்டும். நானாட்டான் பிரதேசத்தில் உள்ள 25000ற்கு மேற்பட்ட கால் நடைகளுக்கும் 2500க்கும் மேற்பட்ட எருமை மாடுகளுக்கும் மேய்ச்சல் நிலங்களை நானாட்டான் பிரதேசத்தில் முழுமையாக பெற்றுக் கொள்வது என்பது தற்போது அரச காணிகள் இல்லாத நிலையில் சாத்தியம் இல்லை என நானாட்டான் பிரதேச செயலாளர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதர்கள் மற்றும் ஆணையாளர்கள் குழு வடக்கிற்கு பயணம்



வெளிவிவகார அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட பல வெளிநாடுகளுக்கான உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் வடமாகாணத்திற்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த போது வடமாகாண ஆளுநர் செயலகத்தில் வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யவும் பல நீண்ட கால மற்றும் குறுகிய கால வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவற்றுள் வடமாகாணத்தில் 25,000 நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களின் முன்னாயத்த வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதகவும் வடமாகாண ஆளுநர் தெரிவித்திருந்தார்.

மேலும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், மக்களின் அன்றாட நடவடிக்கைகள், அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆளுநர் விளக்கமளித்தார்.

வடமாகாண மக்களின் வாழ்வை கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும் புதிய ஆணையாளர்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

கௌரவ ஆளுநரின் தலைமையில் மாகாண மக்களுக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டுவதாகவும், எதிர்காலத்தில் வடக்கின் அபிவிருத்திக்காக தாம் கடமை புரியும் நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் புதிய தூதர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி பயணிகள் படகு சேவைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமை, எதிர்காலத்தில் மன்னாருக்கும் இந்தியாவிற்கும் இடையிலான படகு சேவைத்திட்டங்கள், மீன்பிடி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் போன்றவை பற்றியும், வடமாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் செய்யக்கூடிய சாதகமான ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய ஆளுநரின் நியமனத்தின் பின்னர், வடமாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு மீண்டும் பாராட்டு தெரிவித்த புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், வடமாகாண அபிவிருத்திக்கு அந்தந்த நாடுகளிடமிருந்து அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தனர்.

# சூனியத்தை ஒழிப்பதாக கூறி யாழ்ப்பாணத்தில் பண மோசடி!

யாழ்ப்பாணத்தில் பெரும் பணக்காரர்களை இலக்கு வைத்து நபர் ஒருவர் பண மோசடியில் ஈடுபட்டு வருவதாகவும், அது தொடர்பில் வர்த்தகர்கள் உள்ளிட்டவர்கள் விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்தில் உள்ள பணக்காரர்களை இலக்கு வைத்து அவர்களின் தொலைபேசிக்கு அழைப்பு எடுக்கும் நபர் ஒருவர், தனது ஞான திருஂ'டியால் உங்களின் தொலைபேசி இலக்கத்தை அறிந்து கொண்டேன். உங்களுக்கு ஆபத்து வர போகிறது என கூறி அழைப்பை துண்டித்து விடுவார்.

அதனை கேட்டவர்கள் குழப்பத்தில் இருக்கும் வேளையில், மறுநாள் மீண்டும் அவர்களுக்கு அழைப்பு எடுத்து, உங்களுக்கு பெருநஷ்டம் ஏற்பட போகிறது. உங்கள் வளர்ச்சியில் பொறாமை கொண்டவர்கள் உங்களுக்கு செய்வினை செய்து சூனியம் வைத்துள்ளார்கள். அந்த செய்வினையை உடனே அகற்ற வேண்டும். நான் ஒரு மந்திரீகவாதி என்னால் மட்டுமே அதனை அகற்ற முடியும் என கூறி சில பொதுவான பிரச்சனைகளை கூறி அவர்களுக்கு நம்பிக்கை வரும் வகையில் செயற்படுவார்.

ஒருவாறு அவர்களுக்கு நம்பிக்கை வந்ததும், அவர்களிடம் முற்பணமாக ஒரு பெரும் தொகை பணத்தை அவர் சொல்லும் வங்கி கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட சொல்லுவார். பணம் வைப்பிலிடப்பட்டதும் அவரது தொலைபேசி இலக்கம் செயலிழந்துவிடும். அதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயத்தை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கு அவரின் பெயர் விபரங்கள் தெரியாததாலும், சிலர் தமது அந்தஸ்து கருதி முறைப்படு செய்ய முன் வராததால் அந்நபரின் ஏமாற்று வேலைகள் தொடர்ந்து கொண்டே உள்ளதால் அது தொடர்பில் மக்களே விழிப்பாக இருக்க வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழகம் முழுவதும் 95 மருத்துவமனைகளில் தீக்காய சிகிச்சைக்கான சிறப்பு வார்டுகள்

"தீபாவளி தீக்காய சிகிச்சை அளிப்பதற்காக தமிழகத்தில் 95 இடங்களில் தீ விபத்துக்கான சிறப்பு வார்டுகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. 750 படுக்கைகளுடன் 95 மருத்துவமனைகளில் இந்த வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 95 மருத்துவமனைகளிலும் தீ விபத்துகள் நேர்ந்தால் அதற்கு தேவையான மருந்து போன்ற உபகரணங்கள் போதுமான அளவில் இருப்பு உறுதி செய்யப்படுகிறது" என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணின் தெரிவித்துள்ளார்.

தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று (நவ.8) சென்னை, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி தீக்காய சிறப்பு உள்நோயாளிகள் பிரிவை தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: "தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதையொட்டி, பாதுகாப்புடன் பட்டாசு வெடிப்பதும், தீ விபத்து இல்லாத தீபாவளி என்கின்ற வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின்படி, காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பட்டாசு வெடிப்பதுக்குரிய நேரம், பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பது எப்படி என்பது போன்ற பல்வேறு விழிப்புணர்வுகளை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் விபத்துகள் நேராத வகையில் இந்த தீபாவளி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று அனைவரும் கருதுகிறோம். அதையும் மீறி எங்கேயாவது



தீ விபத்துகள் ஏற்பட்டால் அவர்களை பாதுகாப்பதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. அதேபோல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள் என்று 95 இடங்களில் தீ விபத்துக்கான சிறப்பு வார்டுகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. 750 படுக்கைகளுடன் 95 மருத்துவமனைகளில் இந்த வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த 95 மருத்துவமனைகளிலும் தீ விபத்துகள் நேர்ந்தால் அதற்கு தேவையான மருந்து போன்ற உபகரணங்கள் போதுமான அளவில் இருப்பு உறுதி செய்யப்படுகிறது. அந்தவகையில் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள சிறப்பு தீக்காய பிரிவு பழமை வாய்ந்த ஒன்றாகும். தமிழகத்தில் மட்டுமல்ல, தமிழகத்தைச் சுற்றியுள்ள பல்வேறு மாநிலங்களுக்கும் இம்மருத்துவமனை சிறப்பு தீக்காய அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

**இந்திய செய்திகள்**

கடந்த 1973 ஆம் ஆண்டு 10 படுக்கைகளுடன் தொடங்கப்பட்ட சிறப்பு தீக்காய பிரிவு இன்றைக்கு தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவுக்கே சிறந்த அடையாளமாக விளங்கி கொண்டிருக்கிறது. 24 மணி நேரமும் மருத்துவர்களும், செவிலியர்களும், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களும் தீக்காயம் ஏற்பட்ட நோயாளிகளுக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

தமிழகத்தினை ஒட்டியுள்ள அண்டை மாநிலங்களை சேர்ந்தவர்களும் பயன்பெற்று வருகிறார்கள். 24 மணி நேரமும் அறுவை அரங்குகள் தயார் நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் தீபாவளி பண்டிகையினையொட்டி 2020 ல் 15 பேர் தீக்காயத்தினால் பாதிக்கப்பட்டு ஒருவர் இறந்திருக்கிறார். 2021ஐ பொறுத்தவரை 30 பேர் பாதிக்கப்பட்டனர், இறப்பு எதுவும் இல்லை. 2022 ஆம் ஆண்டை பொறுத்தவரை 38 பேர் பாதிக்கப்பட்டு இறப்பு எதுவும் ஏற்படவில்லை. எனவே கடந்த 2 ஆண்டுகளாக தீபாவளி தீ விபத்தில் இறப்புகள் இல்லை என்ற நிலை தொடர்ந்துக் கொண்டிருக்கிறது.இன்று சிறப்பு தீக்காய பிரிவில் 20 படுக்கைகள் வசதிகளுடன் கூடிய சிறப்பு வார்டு உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில் 5 வெண்டிலேட்டர் கருவிகளுடன் ஆண்களுக்கான வார்டில் 12 படுக்கைகளும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வார்டில் 8 படுக்கைகளும் உள்ளன" என்று அவர் கூறினார்.

# "தமிழகத்தில் பாஜகவுக்கு ஆட்சி அதிகாரம் கிடைக்காது" பெரியார் சிலை குறித்த அண்ணாமலை பேச்சுக்கு அமைச்சர் சேகர்பாபு பதிலடி



"கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் வந்தாலும் வருமே தவிர, பாஜகவுக்கு ஆட்சி அதிகாரம் என்பது தமிழகத்தில், எத்தனை குட்டிக்கர்ணங்கள் அடித்தாலும், எத்தனை ஐடி ரெய்டுகள் நடத்தினாலும், எத்தனை அமலாக்கத்துறை ரெய்டுகள் நடத்தினாலும் கிடைக்காது. தமிழகத்தைப் பொறுத்தவரை இது திராவிட மண்" என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவரின் பிறந்தநாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது சிலையின் கீழ் வைக்கப்பட்டிருந்த உருவப்படத்துக்கு தமிழக அரசு சார்பில் இன்று (நவ.8) மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில், அமைச்சர்கள் சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், சாமிநாதன், மேயர் பிரியா உள்ளிட்ட பலர் கலந்துகொன்டனர். பின்னர் அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், திருச்சி ஸ்ரீரங்கம் கோயில் முன்பாக உள்ள பெரியார் சிலையை அகற்ற வேண்டும் என்று பாஜக தலைவர் அண்ணாமலை பேசியிருப்பது குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், "ஆத்திகர்களும், நாத்திகர்களும் ஒருசேர வாழும் நாடு இந்த நாடு. இதில் பெரியார் கொள்கைகளோடு, இந்து மதத்தையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில்தான், இந்த அரசு நடந்து கொண்டு இருக்கிறது.கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் வந்தாலும் வருமே தவிர, பாஜகவுக்கு ஆட்சி அதிகாரம் என்பது தமிழகத்தில், எத்தனை குட்டிக்கர்ணங்கள் அடித்தாலும், எத்தனை ஐடி ரெய்டுகள் நடத்தினாலும், எத்தனை அமலாக்கத் துறை ரெய்டுகள் நடத்தினாலும் கிடைக்காது. தமிழகத்தைப் பொறுத்தவரை இது திராவிட மண். தமிழக முதல்வர் ஸ்டாலின் ஒரு இரும்பு மனிதர். தமிழகத்தில் இன்னொரு கால் நூற்றாண்டுக்கு, திமுக ஆட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் ஆட்சி அமைப்பது குறித்து நினைத்துப் பார்க்கும் அளவுக்கு ஒரு சூழ்நிலை நிலவவில்லை.

தமிழக முதல்வரின் அரும்பணியும், மக்கள் நலத்திட்டங்களும், ஏற்கெனவே இருக்கும் திமுகவின் வாக்கு வங்கியில் மேலும், 20 சதவீதம் கூடியிருக்கிறது. எனவே, அண்ணாமலை போன்றவர்களுக்கு அதிகாரத் தில் கையெழுத்திடுகின்ற வாய்ப்பை தமிழக மக்கள் எந்நாளும் வழங்கமாட்டார்கள். இந்தியாவில், இந்து சமய அறநிலையத் துறை தமிழகத்தில் 1959ல் உருவாக்கப்பட்ட பிறகு, எண்ணற்ற சாதனைகள் எந்த ஆட்சியிலும் செய்யப்படவில்லை. தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின்படி இந்த திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதால், பாஜக மத ரீதியாகவும், சாதி ரீதியாகவும் மக்களை பிளவுபடுத்தி அதில் ஆதாயம் காண துடிக்கிறது.ஆனால், இந்துக்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்சியாக திமுக இருப்பதால், ஆன்மிகவாதிகளை ஏற்றுக்கொண்டு அரவணைக்கும் இயக்கமாக திமுக இருப்பதால், பாஜகவால் தமிழகத்தில் எதுவும் செய்ய முடியாமல் இருப்பதால்தான், நாங்கள் ஆட்சிக்கு வந்தால், முதல் கையெழுத்து என்றெல்லாம் அறைகூவல் விடுத்து வருகின்றனர்" என்று அவர் கூறினார்.

# தீபாவளியையொட்டி சிறப்பு பேருந்துகள் இயக்கம் தொடங்கியது: சொந்த ஊர்களுக்கு மக்கள் பயணம்

தீபாவளியையொட்டி நேற்று முதல் சிறப்பு பேருந்துள் இயங்கத் தொடங்கின. வரும் 12ம் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. இதற்காக பொதுமக்கள் சிரமமின்றி சொந்த ஊர்களுக்கு பயணமாகும் வகையில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதன்படி நேற்று முதல் சிறப்பு பேருந்துகள் இயங்கத் தொடங்கின. சென்னையை பொருத்தவரை பிற்பகல் முதலே போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. இதற்கு அவ்வப்போது பெய்து வரும் மழையும் காரணமாக இருந்தது. அதே நேரம், மாதவரம் பேருந்து நிலையம், கே.கே.நகர் பேருந்து நிலையம், தாம்பரம் மெப்ஸ் பேருந்து நிலையம், தாம்பரம் ரயில் நிலைய பேருந்து நிறுத்தம், பூவிருந்தவல்லி பைபாஸ் (மாநகர போக்குவரத்துக் கழக பணிமனை), கோயம்பேடு பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் இருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இது தொடர்பாக பயணிகளுக்கு தெரிவிக்கப் பட்டதையடுத்து, அவரவர் செல்லும் ஊர்களுக்கு ஏற்ப பேருந்து நிலையங்களுக்குச் சென்று பயணத்தைத் தொடர்ந்தனர். இந்த பேருந்து நிலையங்களை இணைக்கும் வகையில் கோயம்பேட்டில் இருந்து மாநகர பேருந்துகள் இயக்கப்பட்டன. கோயம்பேடு பேருந்து நிலையத்தில் தென்மாவட்டம் உள்ளிட்ட சில ஊர்களுக்குச் செல்லும் பயணிகள் மட்டுமே வருகை தந்தனர்.

ஆம்னி பேருந்துகளைப் பொருத்தவரை, கோயம்பேடு மற்றும் கிளாம்பாக்கம் தற்காலிக பேருந்து நிலையங்கள் வாயிலாக பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர், தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதைத் தவிர்த்து திருப்போரூர் செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளி வட்டச் சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர்.

பேருந்து இயக்கம் தொடர்பாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியதாவது: சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2,100 பேருந்துகளுடன் நேற்றைய தினம் 1,365 சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டிருந்தது. இதில் பொதுமக்களுக்குத் தேவையான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டன. அதேநேரம், சென்னையில் இருந்து பயணிக்க 19,858 பேர் முன்பதிவு செய்திருந்தனர். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் அனைத்து இருக்கைகளும் பூர்த்தியான பேருந்துகள் மட்டும் கோயம்பேட்டிலிருந்து புறப்பட்டு பூவிருந் தவல்லி, நசரத்பேட்டை, வெளிவட்டச் சாலை வழியாக வண்டலூர் சென்றடையும் வகையில் இயக்கப்பட்டன. இந்த பேருந்துகளில் தாம்பரம் மற்றும் பெருங் களத்தூரில் இருந்து பயணம் மேற்கொள்ள முன்புதிவு செய்த பயணிகள் கிளாம்பாக்கம் தற்காலிக பேருந்து நிறுத்தத்தில் ஏறிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது.

தமிழக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கும் 94450 14450, 94450 14436 ஆகிய தொலைபேசி எண்களை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 மற்றும் 044 2474 9002, 044 2628 0445, 044 2628 1611 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்

**தன்மாத்திரை என்பதன் பொருள் என்ன?**

தன்மாத்திரை என்றால் அதனளவில் அடங்கி இருப்பது எனலாம். தன்மாத்திரைகள் என்று குறிப்பிடப்படும் சத்தம், பரிசம் (ஓசை, ஊறு) போன்றவை நாம் அனுபவிக்கும் சத்தம் முதலியவற்றுள் அடங்கியிருப்பன. தன்மாத்திரை = தத் + மாத்திரை. தத் - அது; மாத்திரை - அளவு. தன்னளவில் உள்ளது தன்மாத்திரை.

தூலப் பொருட்களுக்கு சூக்குமப் பொருட்கள் மூலமாக அமைகின்றன. ஐம்பூதங்களுக்குத் தன்மாத்திரைகள் மூலமாக உள்ளன. மண், நீர், தீ, காற்று, வெளி ஆகியவற்றுக்கு முறையே நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை ஆகிய தன்மாத்திரைகள் மூலமாக அமைந்துள்ளன.



**நமது உடம்பின் அமைப்பில் தொடர்புடைய தத்துவங்கள் எவை?**

உடம்பு என்று கூறும் பொழுது எமக்குள்ள பரு உடம்பை விட நுண்ணுடம்புகளும் உள்ளன. தத்துவங்களில் சிவதத்தவங்கள் ஐந்தும் இவற்றில் தொடர்பு கொள்வதில்லை.

பூதங்கள் ஐந்தும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பத்தும் பரு உடம்பாக வருகின்றன. இதனைத் தூல சரீரம் என்றும் அன்னமய கோசம் என்றும் குறிப்பிடுவர். (கோசம் - உடம்பு) மனம், புத்தி, ஆங்காரம் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்தும் சேர்ந்து சூக்கும சரீரம் அல்லது பிராணமய கோசம் எனப்படும். சித்தம் அல்லது பிரகிருதி குணசரீரம் அல்லது மனோமய கோசம். (சித்தமாய் நிற்பது பிரகிருதி). காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஐந்தும் கஞ்சுக சரீரம் அல்லது விஞ்ஞானமய கோசம். (இந்த ஐந்தின் கூட்டு புருட தத்துவம்). வித்தியா தத்துவங்களில் ஒன்றான மாயை காரண சரீரம் அல்லது ஆனந்தமய கோசம். இவ்வாறு உடம்புகள் ஐந்தாக உள்ளன. இவற்றில் இறுதி மூன்று சரீரங்களையும் பர சரீரம் எனப் பெயரிட்டு, உடம்புகளை தூல சரீரம், சூக்கும சரீரம், பர சரீரம் எனச் சொல்லுதலும் உண்டு. பரசரீரம் என்பதற்கு அதிசூக்கும சரீரம் என்பது பொருள். தூல சரீரம் முதல் காரண சரீரம் வரை ஒன்றை விட ஒன்று நுண்ணியதாக இருக்கும்.

**தாத்துவீகம், மாயேயம் என்பன யாவை?**

பிரகிருதி மாயா தத்துவங்கள் இருபத்தி நான்கின் தொடர்புடையவையும் அவற்றின் கூறுகளும், முக் குணங்களும், நால்வகை வாக்கும் தாத்துவிகம் எனப்படும். இவை அறுபதாகக் கொள்ளப்படுகின்றன. இந்த அறுபது தாத்துவிகங்களையும் முப்பத்தாறு தத்துவங்களுடன் சேர்த்து, தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்று கூறும் வழக்கமும் உண்டு.

மாயா காரியங்களான தத்துவங்ளை மாயேயம் என்று கூறுவதும் உண்டு.

## சிவனின் அருட்டிருமேனி

**உயிர் எடுக்கும் உடல்கள் அல்லது வடிவங்கள் அது மாயையிலிருந்து இறையருளால் பெறப்படுகின்றன. இறைவன் எடுக்கும் வடிவங்கள் அப்படி அல்ல என்று கூறப்படுகின்றது. இதன் காரணம் என்ன?**

இறைவனுக்கு உடம்பு (உருவம்) உண்டானால், மாயையிலிருந்து தான் வரவேண்டும் என்று கொள்ளின், அவன் மாயையில் அகப்பட்டவன் என்ற நிலை தோன்றும். அத்துடன் அவனின் உடம்பைப் படைத்து அளிப்பவன் இன்னொருவன் இருக்கிறான் என்ற நிலையும் உண்டாகும்.

கடவுள் குறித்த இரண்டாம் அத்தியாயத்தில் கூறியவாறு, இறைவன் தன் நிலையில் உருவமற்று அருவமாக இருக்கிறான். இங்ஙனம் இருந்தால், அவனால் உயிர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. அவனைக் காணவேண்டும், கண்டு தொழவேண்டும், தொழுது அவனின் அருளைப் பெறவேண்டும் என்ற உயிர்களின் ஆர்வம் நிறைவேறாமல் போகும். எனவே உயிர்களுக்கு உதவுவதற்காக இறைவன் உருவம் கொள்கிறான். அவன் கொள்ளும் உருவம் அருள் உருவம். அது மாயையிலிருந்து தோன்றியதல்ல. சிவஞான சித்தியார் என்ற சித்தாந்த நூலில் வரும் "அருள்உரு உயிருக்கென்றே ஆக்கினன்" என்ற தொடர் இதனை விளக்குவதாக உள்ளது.

**இறைவன் கூர்ம அவதாரம், கல்கி அவதாரம் போன்ற அவதாரங்கள் எடுத்ததாகக் கூறப்படுகிறது. இந்த அவதாரங்களில் அவன் ஒவ்வொரு உடம்பு எடுக்கிறான். சைவ சித்தாந்தம் இது பற்றி கூறுவதென்ன?**

இந்த அவதாரங்கள் சைவசமயத்தில் இல்லாதவை. இவை வேற்று மதங்களில் காணக்கூடியவை. கடவுள் தாயின் வயிற்றில் பிறப்பது என்பது சைவத்தில் இல்லை. சிவனைப் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்று கந்தரனுபூதி விளக்குகிறது. பிறப்பு இறப்பு இல்லாத, என்றுமுள்ள பரம்பொருள் அடியவர்களுக்கு உடம்போடு கூடி வந்து அருள்புரிவதை வரலாற்றில் காணலாம். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு குருவடிவாகி வந்து குருந்த மரத்தடியில் அருள்புரிந்த வரலாறுண்டு. இங்கே மாணிக்கவாசக சுவாமிகள் கண்ட வடிவம் சிவனின் அருள் திருமேனி. இது சிவன் எடுத்த அவதாரமல்ல.

**இறைவன் கொள்ளும் வடிவங்களில் மாயையின் தொடர்பு எதுவும் இல்லை என்று கூறமுடியுமா?**

உலகைச் செயற்படுத்தி நிற்கும் இறைவனுக்கு மாயா காரியமான சிவ தத்துவம் இடமாய் நிற்கிறது. இந்த வகையில் இறைவன் கொள்ளும் வடிவம் மாயையின் தொடர்புடையது எனக் கருதலாம். ஆனால் அவனின் வடிவம் மாயையாலானதன்று அது அருள் வடிவம்.

**சிவ தத்துவத்தை இடமாகக் கொண்டு இறைவன் கொள்ளும் வடிவங்களை விளக்குக.?**

தன்னிலையில் சிவனைப் பரசிவம் என்று அழைப்பதுண்டு. பரசிவம் உயிர்கள் மீது கருணை கொள்ளும் நிலையில் பராசத்தி எனப்படும். சுத்த மாயையில் உள்ள நாதம் முதலிய ஐந்து சிவ தத்துவங்களையும் தோற்றுவிப்பது பராசத்தியே. இத் தத்தவங்களில் நின்று சிவன் எடுக்கும் திருமேனிகள் உண்மையில் பராசத்தியை இடமாகக் கொண்டவை. இவை ஏழு திருமேனிகள். இந்த ஏழினோடு, தத்துவத் தொடர்பில்லாத பரசிவனையும் பராசத்தியையும் சேர்த்து சிவன் கொண்ட திருமேனி ஒன்பதாகக் கொள்ளப்படும்.

இத் திருமேனிகள் கொண்ட இறை பெயர்கள் முறையே பரசிவம், பராசத்தி, அபரசிவன் (நாதம்), அபரசத்தி (விந்து), சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், நான்முகன் என்பனவாகும். தத்துவங்களைப் பொருந்தும் முறையில், நாதத்தில் அபரசிவனும், விந்துவில் அபரசத்தியும், சாதாக்கியத்தில் சதாசிவனும், ஈசுரத்தில் மகேசுவரனும், சுத்தவித்தையில் உருத்திரன், திருமால், நான்முகனும் பொருந்தி நிற்பர். பரசிவமும் பராசத்தியும் இத்தத்துவங்களைக் கடந்த நிலையில் உள்ளனர். உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் இந்த ஒன்பது நிலையில் நடிக்கிறான் என்று சித்தியார் கூறுகிறது. "நவந்தரு பேதமாக ஏக நாதனே நடிப்பன் என்பது சித்தியார்த் தொடர். சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், நான்முகன் ஆகியோரின் சத்திகள் முறையே மனோன்மணி, மகேசுவரி, உமை, திருமகள், கலைமகள் ஆவர்.

**சிவனுக்கும் சத்திக்குமுள்ள உறவு என்ன?**

சூரியனிடத்தில் இயல்பாகவே ஒளி இருப்பது போல், சிவனிடத்தில் இயல்பாகவே சத்தி உள்ளது. சிவனின் தன்னிலையில் சத்தி அவனிடத்தில் ஒடுங்கி இருக்கும். உயிர்களுக்கு அருள் புரியும் நிலையில் அவனிடத்திலுள்ள சத்தி விரிந்து சிவனுக்குரிய வடிவங்களைப் பெறும். இவ்வடிவங்கள் சிவனின் கிருத்தியங்களுக்கு (செயற்பாட்டுக்கு) ஏற்ப அமையும். இவ்விரு நிலைகளிலும் சிவமும் சத்தியும் ஒன்றேதான். ஒன்றிலிருந்து ஒன்று பிரிவில்லாத சிவன் சத்தி உறவு தாதான்மிய உறவு (தாதான்மிய சம்பந்தம்) எனப்படும்.

திருச்சிற்றம்பலம்

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva
P.Abiram
SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaikappu". These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar was once staying in the Thiruvaduthurai temple in Mayiladuthurai, one day his father(Sivapathaviruthayar) came there to meet him. Thiruvaduthurai temple was built by the cholas during 9th century C.E, with additions later made by chola kings. The temple has five entrance towers known as gopurams. There is another story which is associated with this temple, with the saiva saint Thirumoolar.



Thirumoolar was walking around the temple when he saw a herd of cows mourning the death of their herder, Moolan. Thirumoolar entered the body of Moolan to serve as a herder. When he came back to where he left his original body, he couldn't find it. Thirumoolar took it as an act of Sivan and continued to remain in the body of Moolan for the rest of his life. It was in this temple where Sampanthar's father asked Sampanthar for some gold coins he could use to do prayers in Sirkali. However, Sampanthar had no gold, so Sampanthar praised Sivan with the hymn "Idarinum Thalarinum", and Sivan granted Sambanthar with some gold. The hymn goes as follows.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோவு னதின்னருள் ஆவடு துறையரனே

Idarinum Thalarinum enadhuru noy
thodarinum unakalal tholudheluven
kadalthanil amudhodu kalanthananchai
midarinil adakkiya vedhiyane
idhuvoemai yaluma rivadhon Remak killai yei
Adhuvo vuna dhinnarul avadu thuraiyarane

In English this translates to, when I am undergoing sufferings. When I am depressed in spirit. when my big karmams follow me I shall wake up from sleep worshipping your feet. Sivan who controlled the poison which was mixed with the nectar in the ocean of milk and made it stay in the neck!if there is nothing to give to us. Is this way you admit us as your protege? Is your sweet grace like that?

While singing this hymn, Sivan granted him a bag of gold coins through a Sivabootha. The Sivabootha gave Sampanthar the bag and told him there were a thousand coins in the bag and the bag would never become empty. Sampanthar received the bag with gratitude and gave it to his father, who left to Sirkali to perform some prayers.

# புத்தளம் கல்வி வலய இளையோர்களுக்கு "அனைத்து உலக மருத்துவ நல அமைப்பின்" (IMHO - USA) தலைமைத்துவ பயிற்சி



புத்தளம் கல்வி வலையத்தை சேர்ந்த ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம் இந்துதமிழ் மகா வித்தியாலயம், புனித மரியாள் தமிழ் வித்தியாலயம், கற்பிட்டி அ.றோ.க தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த ,க.பொ.த உயர்தர பரீட்சையை சென்ற வருடம் எழுதிய 35 மாணவர்கள் நவம்பர் 2 முதல் நவம்பர் 5 ,2023 வரை நடைபெற்ற இத் தலைமைத்துவ பயிற்சி பட்டறையில் பங்கு பற்றியிருந்தார்கள்.இது வவுனியா மரக்காரம்பளையில் அமைந்துள்ள மாகாண தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் நான்கு நாட்கள் கொண்ட வதிவிட பயிற்சியாக நடைபெற்றது.

இதுவரையில் பாடசாலை ரீதியில் ஒட்டு மொத்தமாக வெளிக்கொணரப்படாத மாணவர்களது நடிப்புத் திறன் ,வாசிப்பு திறன், எழுத்துத்திறன், கவித்திறன்,விவாதத் திறன், முன்வைப்பு திறன் ,முன் வருகைத் திறன், ஏற்றுக்கொள்ளும் திறன் மற்றும் உடல்,உள ஆரோக்கிய மேம்பாடு என்பன தூண்டப்படவும் துலங்கவும் இது ஒரு வாய்ப்பாக மாணவர்களுக்கு அமைந்தது.

வளமான வளவாளர்களின் விரிவுரைகள் அற்ற செயற்படுசார் பயிற்சிகள், முழுமைப்படுத்தப்பட்ட விடய ஒழுங்கமைப்புகள், மாற்றத்தை விரும்பும் இளையோருக்கான காணொலிகள் அவற்றை ஒட்டிய கருத்துப்பரிமாறல்கள் மாணவர்களுக்கு புதிய அனுபவத்தை அளித்தது.



மிக முக்கியமாக குறித்த இளையோரிடமிருந்து வளவாளர்கள் எதிர்பார்க்கும் கருத்துக்கள் ,பதில்கள் மாறுதல்கள் சமுதாய சிந்தனைகள் போன்றன தோற்றம் வரும் வண்ணம் அமைந்த நிகழ்வுத் திட்டமிடல்கள் அனைவரையும் பிரமிக்க வைத்தது. மேலும் அவர்களின் திறன்களை வெளிக்கொணரும் விதமாக **Talented Show** நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இப்பயிற்சியில் ஒழுங்கமைத்த நேர்முகத் தேர்வு புதிய அனுபவமாக இருந்தது மட்டுமன்றி ஒவ்வொரு மாணவரும் தனக்கான சுயவிருத்தி திட்டம் **(Self DevelopmentPlan)** ஒன்றை வடிவமைத்தமை இப்பயிற்சி நெறியின் சிறப்பை மேம்படுத்தியது எனலாம்.


இப்பயிற்சியானது அனைத்து உலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திரு சு கிருஸ்ணகுமார் அவர்களின் நெறிப்படுத்தலில் **Vision Global Empowerment- USA** அமைப்பின் வளவாளர்கள், வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவி க்கல்வி பணிப்பாளர், மனவளக்கலை பேராசிரியர் மற்றும் ஆசிரியர் பயிற்சி மத்திய நிலைய முகாமையாளர் போன்றோர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தார்கள். இப்பயிற்சி நெறியில் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயம் நாயக்கர் சேனை தமிழ் வித்தியாலயம், அதிபர்களுடன் ஆசிரியர்களும் கலந்து கொண்டு மாணவர்களின் நலன்களை கவனித்து பயிற்சி சிறப்புற நடைபெற உதவி புரிந்தமை பாராட்டுதலுக்குரியது.

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1073



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## அனலைதீவு அரிஉறரபுத்திரஜயனார் ஆலயம்
## அனலைதீவு, யாழ்ப்பாணம்

அண்மையில் இறைவனடி சேர்ந்த எனது அன்புக் கணவர் அனலைதீவை பிறப்பிடமாகக் கொண்டவர். அனலைதீவு அரிஉறரபுத்திர ஐயனார்மீது ஆராத பக்தி கொண்டவர். 20 வருடங்களுக்கு மேலாக ஈழத்துத் திருக்கோயில்கள் தொடரை எழுதுவதற்கு அருந்துணை புரிந்தவர். அனலைதீவு அரிஉறறரபுத்திரஜயனார் ஆலயத் தொடரை எனது அன்புக்கணவருக்கு ஆத்மசமர்ப்பணாகச் சமர்ப்பிக்கின்றேன். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும். ஓம் சாந்தி.

*" ... அணலயம் பதிவாழ் ஐயனே வருக*
*கணநாதர் போற்றும் கடவுளே வருக*
*ஓம்ஆம் எனுமுயர் பராபரனே*
*ஆம்ஓம் எனும் ஆதியே வருக*
*ஐந்து கடவுளா ஐந்தொழில் நடாத்தும்*
*எந்தையே தந்தியிலிவர்ந்து நீ வருக*
*வஞ்சனை சூனியம் மாறிடவருக*
*பவமறுத் தருட்கண் பார்த்திட வருக வருகவே... "*

தற்கால மனிதனின் வாழ்க்கை முறை தர்மத்தைப் பேணவிடாமல், அதர்மத்தைச் செய்யவே தூண்டுகின்றது. மனித மனம் எப்பொழுதும் சஞ்சலமுடையது. மகிழ்ச்சி, விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பமென உழன்று வருகின்றது. இவ்வாறான மனதை ஒருவழிப்படுத்த இறைவழிபாடுமட்டுமே உதவும். அறிவுசான்றோரும், ஞானியரும் இறைவனைத் தமக்குள் கண்டு, தியானமூலம் மனஅமைதியைப் பெறுவர். சாதாரண மக்களிடையே மனஅமைதியை ஏற்படுத்த, ஆன்றோர்கள் ஆலயங்களை அமைத்து, அறநெறிகளை வகுத்து, சமுதாய மேம்பாட்டிற்கு உதவியுள்ளனர். இந்தவகையிலே ஈழமெங்கும் ஆலயங்கள் மிகுந்து காணப்படுகின்றன.

ப.்.றுளி ஆறும் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள, எஞ்சிய நிலப்பரப்பில் காணப்படும், தொன்மையான தீவுகள் யாழ்பாணத்தைச் சூழ்ந்து, சப்ததீவுகள் எனப் பெயர் பெற்று விளங்குகின்றன. இத்தீவு நயினாதீவிற்கும், எழுவைதீவிற்கும் இடையிலே காணப்படுகின்றது. புலியேத்தி என வழங்கப்பட்டு பின் புளியேத்தியாகிப் பின் மருவி புளியந்தீவு என வழங்கப்படும் சிறுதீவும், அனலைதீவோடு இணைந்துள்ளது. புளியந்தீவிலே இருபெரிய காலடிச்சுவடுகள் காணப்படுகின்றன. இச்சுவடுகள்பற்றிய ஆய்வுமுறையிலான கருத்துக்கள் எதுவும் இதுவரை தொடரப்படவில்லை. சப்ததீவுகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஈழவரலாற்றுத் தொன்மையோடு நெருங்கிய தொடர்புடையவை என்பதைக் கருத்தில் கொண்டு ஆய்வுகள் நடத்தப்படின், பல்வேறு ஆதாரங்களைப் பெறமுடியும். புளியந்தீவு, அனலைதீவின் தெற்குப்புறத்திலே காணப்படுகின்றது. அனலைதீவு, ஊர்காவற்துறையிலிருந்து, ஏழு கடல்மைல் தொலைவில் அமைந்து, மூன்றரைமைல் நீளமும், ஒன்றரை மைல் அகலமும் உடையதாய், வடக்குத் தெற்காக நீண்டு கிடக்கின்றது.

அனலைதீவு என்ற பெயர் ஏற்பட்டமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டுள்ளன. நாற்புறமும் கடலால் சூழப்பட்டுள்ள இத்தீவு, பொங்கியெழும் கடலலைக்கு இரையாகாமல் இயற்கையாகவே கற்பாறைகளை அணையாகக்கொண்டு காணப்படுகின்றன. இதனால் இத்தீவிற்கு அணை அலைதீவு என்னும் பெயர் காரணப் பெயராக ஏற்பட்டுள்ளதென்றும், இப்பெயர் அணைலதீவு, அணலதீவு என வழங்கிப் பின் அனலைதீவென மருவியதென்பர். ஈழவரலாற்றோடு தொடர்புடைய சில செய்திகளும் அனலைதீவு பெயர்க்காரணத்தோடு தொடர்புபட்டுள்ளது.

அனலைதீவிற்கு அருகிலுள்ளது நயினாதீவு. இங்கு நாகர்குடிமரபில் வந்தவரும், முடிநாகமும், நாயனார்பட்டரும் கலந்த சந்ததியில் தோன்றியவருமான தையலியாசி என்னும் பெண்மணி அக்காலப் பகுதியில் பெரும்புகழ் படைத்தவராகக் காணப்பட்டுள்ளார். இவர் நயினாதீவின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டதோடு, இப்பெண்மணியின் மரக்கலங்கள், நாகபட்டினம் போன்ற பட்டினங்களோடும் வியாபாரத் தொடர்பைக் கொண்டவையாகக் காணப்பட்டுள்ளன. கி.பி 1675 ஆம் ஆண்டளவில் தையலியாசியின் இரு ஆண்பிள்ளைகளும் முதலியார், ஊடையார் என்ற பட்டங்களைத் தாங்கி வாழ்ந்துள்ளனர். நயினாதீவில் தையலியாசி புகழ்பெற்று விளங்கியகாலை, அனலை என்னும் பெண்ணரசி, தற்காலத்தில் அனலைதீவென அழைக்கப்படும் தீவை ஆட்சி செய்துள்ளார். இப்பெண்ணரசியின் பெயராலேயே இத்தீவு அனலைதீவு எனப் பெயர் பெற்றதென வேறு சில குறிப்புக்களிலே கூறப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் பெண்களும் திரைகடலோடித் திரவியம் தேடியுள்ளனர். ஈழவரலாற்றிலே பெண்கள் பல பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர். எனினும் இப்பெண்களைப் பற்றிய தகவல்கள், காலப்பகுதிகள் எவ்வாறோ இடம்பெறாதுபோனமை வரலாற்றுப் பின்னடைவாகவே காணப்படுகின்றது.

அனலைதீவின் புகழுக்கு இங்கு அமைந்துள்ள ஆலயங்களும் முக்கிய காரணமாகக் காணப்படுகின்றன. அனலைதீவில் பல ஆலயங்கள் காணப்பட்டபோதிலும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாக விளங்குவது அருள்மிகு அரிஉறரபுத்திர ஐயனார் ஆலயமாகும். ஐயனார், இவ்வூரின் காவல்தெய்வமாக விளங்கி இவ்வூர் மக்களைக் காத்து வருகின்றார். ஒருகால கட்டத்தில், சைவமும், வைணவமும் தாம் தாம் பெரியவர் என்ற வாதப்பிரதி வாதங்களில் ஈடுபட்டபோது, சைவ சமண ஐக்கியத்தை ஏற்படுத்தும் நோக்கில் படைக்கப்பட்ட, தெய்வ வடிவமே ஐயனார் வடிவமாகும். இக்கருவைக் கருத்தில்கொண்டு புராணக்கதைகளும் படைக்கப்பட்டன. முழுமுதற்கடவுளாகிய சிவனின் இளையபிள்ளையும், காத்தற் கடவுளுமாகிய ஐயனாருக்கென அமைக்கப்பட்ட ஆலயங்கள் ஈழத்தில் மிகச்சிலவாகவே காணப்படுகின்றன. இவற்றுள்ளும் யாவருமறிந்த ஐயனார் ஆலயமாக விளங்கும் சிறப்பைப் பெற்றது அனலைதீவு அரிஉறரபுத்திர ஐயனார் ஆலயமாகும். இங்குள்ள ஐயனார் கோவில் பலவகையிலும் சிறப்புப் பெற்றதாகக் காணப்படுகின்றது. இங்கு வாழும் மக்களின் குலதெய்வம் பூரணை புட்கலை சமேத ஐயனாரே ஆவர்.


அனலைதீவில் ஐயனார் ஆலயம் அமைந்த வரலாறு காலநியதியும் தெய்வசித்தமுங் கொண்டதாகக் காணப்படுகின்றது. மருதநிலமும், நெய்தல் நிலமும் சேர்ந்து காணப்படும் நயினாகுளம் என்னும் இடத்திலேயே ஐயனார்கோவில் உள்ளது. இற்றைக்கு ஏறக்குறைய முன்னூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன், அலையெறியும் கடலால் சூழப்பட்ட அனலைதீவின் மேற்குக் கடற்கரைப்பகுதியில், அழகிய பேழையொன்று, சமுத்திர அலைகளால் அடித்துவரப்பட்டுக் கரை ஒதுங்கியது. கரையொதுங்கிய பேழையைக் கண்டெடுத்த மக்கள், அப்பேழையை எடுத்துச்சென்றபோது. பாரந்தாங்கமுடியாது நயினாகுளம் என்ற இடத்தில், அருகிலுள்ள கூழா மரத்தடியில் வைத்து இளைப்பாறினர். சற்றுநேரத்தின் பின் பேழையைத் தூக்க முயன்றபோது, அவ்விடத்தினின்றும் அசைக்க முடியாது தடுமாறினர். பேழையுள் இருப்பதை அறியும் ஆவலால், அதனை உடைத்துத் திறந்தபோது, உள்ளே பூரணை,புட்கலை சமேத ஐயனார் திருவுருவச் சிலையைக் கண்டு அவ்விடத்திலேயே கோவில் அமைத்து வணங்கினர்.

**- தொடரும்...**

ERAA PLAZA
5928 FINCH AVE EAST
SCARBOROUGH, M1B5P8
(647) 295-9299
value mobile
NEW TO CANADA?
COME SEE US TODAY FOR AMAZING DEALS ON PHONE & PLANS!
5G ROGERS INFINITE
$42
PLUS TAX PER MONTH
தமிழில் உரையாடி உங்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்
30GB DATA
UNLIMITED CANADA-WIDE WITH US CALLING
UNLIMITED CANADA & US TEXT & VIDEO MESSAGING
BRING YOUR OWN DEVICE OR GET A PHONE FROM US

# கப்பலும் அமைச்சரும் தூதுவரும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



இந்த வாரம் சீனத் தூதுவர் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அவர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்த்தார். நலிவுற்றவர்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கு நிவாரணமும் வழங்கினார்.

குடிமக்கள் சமூகங்களை சேர்ந்தவர்களோடு ஜெட் விங் ஹோட்டலில் ஒரு சந்திப்பு இடம் பெற்றது. சந்திப்பின்போது சீனா கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்தை ஆதரித்து வருவது சுட்டிக்காட்டப்பட்டது. அரசாங்கத்தை ஆதரிப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளையும் நில ஆக்கிரமிப்பையும் சிங்கள பௌத்த மயமாக்கலையும் ஆதரிப்பதாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சிவில் சமூக பிரதிநிதிகள் எடுத்துக் கூறினார்கள். இலங்கை இனப்பிரச்சினைக்கு சீனா எப்படிப்பட்ட ஒரு தீர்வை முன்வைக்கின்றது என்றும் கேட்கப்பட்டது. அந்தத் தீர்வை சீனா தன்னுடைய உத்தியோகபூர்வ நிலைபாட்டாக வெளிப்படுத்துமா என்றும் கேட்கப்பட்டது.

ஆனால் அவர் எல்லாவற்றுக்கும் ஒரு ரெடிமேட் பதிலை கூறினார். சீனா ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாது என்பதே அது. தாங்கள் இலங்கைத் தீவில் உள்ள மூன்று இனங்களையும் சமமாகப் பார்ப்பதாகவும், மூன்று இனங்களுக்கும் சமமாக உதவுவதாகவும் அவர் கூறினார். பெருந்தொற்று நோய்க் காலத்தில் சீனா தனது தடுப்பூசிகளை இலங்கைக்கு இலவசமாக வழங்கிய பொழுது, அவை குறிப்பாக வடக்கு கிழக்குக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என்று தான் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் எப்படிப்பட்ட அபிவிருத்தி சார் பொருளாதார நடவடிக்கைகளில் சீனா ஈடுபடலாம் என்பதை அவர் ஆர்வமாக கேட்டார். அதே சமயம் சீனாவின் முதலீடுகளை வெளிநாடு ஒன்று தடுக்கிறது என்ற தொனியும் அவருடைய பதில்களில் காணப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளில் சீனா கட்ட முயன்ற மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டத்தை இந்தியா தடுத்ததையும், யாழ் பல்கலைக்கழகத்தோடு இணைந்து சீனப் பல்கலைக்கழகம் முன்னெடுக்கவிருந்த சில புலமைச் செயற்பாடுகளை இந்தியா தடுத்தது என்பதையும் அவர் மறைமுகமாகக் கூறினார்.

ஆனால், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் பகை இல்லை, நட்புதான் உண்டு என்றும், தமிழ் மக்களுக்கு உதவும் விடயத்தில் சீனாவிடம் உள்நோக்கங்கள் மறைமுகமான நிகழ்ச்சி நிரல் எதுவும் கிடையாது என்றும் தெளிவாகச் சொன்னார்.

இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வை சீனா முன் வைக்கிறது என்பதனை கடைசிவரை கூறவே இல்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்திலும் சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் நிலப்பறிப்பு போன்ற விடயங்களில் சீனா அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் என்ற வாக்குறுதி எதையும் அவர் வழங்கவும் இல்லை.

சீனத் தூதர் யாழ்ப்பாணம் வருவதற்கு சில நாட்களுக்கு முன் இந்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் வடக்கு கிழக்கு வருகை தந்திருந்தார். அது ஓர் அரசு முறைப் பயணம் அல்ல என்று கூறப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் வேட்டியணிந்து காணப்பட்டார்கள். இந்திய ராஜதந்திரிகள் வழமையாக அணியும் ஆடைகளோடு காணப்படவில்லை. நிர்மலா சீதாராமன் வடக்கிலும் கிழக்கிலும் பல பகுதிகளுக்கும் சென்றார்.

குறிப்பாக, தெற்கில் பௌத்த மகா நாயக்கர்களைச் சந்தித்தார். அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பௌத்த தொடர்புகளை பலப்படுத்துவதற்கான செயல்திட்டங்களுக்காக 15 மில்லியன் டொலர்களை இந்தியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கான ஆவணங்கள் இரு நாடுகளுக்கும் இடையே பரிமாறப்பட்டன.

கிழக்கில், நிர்மலா சீதாராமன் திருக்கோணேஸ்வரம் சென்றார். திருக்கோணேஸ்வரத்தை புனரமைப்பதற்கு இந்தியா உதவ வேண்டும் என்று அங்கு அவரைக் கண்ட இந்து மத அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. ஏற்கனவே திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைப்பதற்கு இந்தியா நிதி உதவி வழங்கியது போல திருக்கோணேஸ்வரத்துக்கும் வழங்க வேண்டும் என்று அவர்கள் கேட்டனர்.

யாழ்ப்பாணத்தில் அவர் நல்லூர் கோவிலுக்கு வருகை தந்தார். அங்கே அந்த கோவிலுக்கு வந்திருந்த தமிழ் மக்களோடு சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார். வடக்கிலும் கிழக்கிலும் அவர் கோவில்களுக்கு விஜயம் செய்ததைத் தவிர அரசியல்வாதிகளைச் சந்திக்கவில்லை.

நிர்மலா சீதாராமன் இலங்கைக்கு வருவதற்கு சில நாட்களுக்கு முன்னர் தான் சீனாவின் ஆராய்ச்சி கப்பல் ஒன்று இலங்கை துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்றது. அக்கப்பல் வரக்கூடாது என்று இந்தியா இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்ததாக தகவல்கள் வெளிவந்தன. இதற்கு முன்னரும் அப்படி ஒரு கப்பல் கடந்த ஆண்டு வந்தது. அதைத் தடுக்க இந்தியாவால் முடியவில்லை. இந்தக் கப்பலும் இந்தியாவின் எதிர்ப்பை மீறி இலங்கைக்குள் நுழைந்தது. இங்கு அது சில நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டதாக சீனத் தூதரகம் கூறுகிறது. அது ஒரு ஆராய்ச்சி கப்பல் தான் என்றும் அது பலனாய்வு நடவடிக்கைகளுக்காக நாட்டுக்குள் வரவில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறினார். உலகில் எந்த ஒரு புலனாய்வுக்கப்பலும் புலனாய்வு நோக்கங்களுக்காகத்தான் ஒரு கடற்பரப்புக்குள் வருவதாக கூறிக்கொண்டு வருவதில்லை. அவை வர்த்தக நோக்கங்கள் அல்லது ஆராய்ச்சி நோக்கங்கள் போன்ற ஏதோ ஒரு மறைப்பின் கீழ் தான் ஒரு நாட்டின் கடற்பரப்புக்குள் நுழைகின்றன. ரணில் விக்கிரமசிங்க எதையோ மறைக்க முயற்சிக்கிறார் என்று தெரிகிறது. கடனை மீள கட்டமைப்பதற்கு சீனாவிடம் தங்கியிருக்கும் அவருக்குச் சீனக் கப்பல்களை உள்ளே வர விடுவதைத் தவிர வேறு வழியில்லை.

சீனக் கப்பல் வருவதற்கு சில நாட்களுக்கு முன், கடந்த மாதம் 18ம் திகதி இந்தியக் கடற்படைக் கப்பலான ஐ.என்.எஸ்.ஐராவட் - INS 'Airavat' - கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்றது. இங்கு அது இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளை வழங்கியது. அது ஏற்கனவே அரசுக்கும்-அரசுக்கும் இடையே ஒப்புக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின்படி நிகழ்ந்த வழமையான ஒரு வருகை என்று கூறப்படுகிறது. அதேசமயம் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் மேலும் ஒரு சீன ஆராய்ச்சி கப்பல் இலங்கைக்கு வர இருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

மேற்சொன்னவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது என்ன தெரிகிறது? பிராந்தியத்தில் தமிழ் மக்களின் தாயகத்துக்குள்ள கவர்ச்சியை அது காட்டுகிறதா?

வடக்கு கிழக்கில் தங்கள் நடவடிக்கைகளுக்கு பின் மறைவான நிகழ்ச்சி நிரல் எதுவும் கிடையாது என்று சீன தூதுவர் கூறுகிறார். இலங்கைத் தீவில் மட்டுமல்ல ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சீனா தன் முதலீடுகளை, உட்கட்டுமான விருத்தி, அபிவிருத்தி போன்ற தலைப்புகளின் கீழ் தான் முன்னெடுத்து வருகின்றது. ஆனால் அவை நீண்ட எதிர்காலத்தில் சீனாவின் பாதுகாப்பு இலக்குகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலானவை என்று மேற்கு நாடுகள் சந்தேகிக்கின்றன.

சிறிய இலங்கை தீவு அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய மூன்று பேரரசுகளின் நலன்களும் முட்டி மோதும் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஓரிடத்தில் அமைந்திருக்கின்றது. இலங்கைத் தீவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாகத்தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக துன்பப்படுகின்றார்கள். எல்லாப் பேரரசுகளும் தத்தமது நலன்களுக்கு ஏற்ப தமிழ் மக்களைக் கையாண்டு விட்டுப் போக பார்க்கின்றன.

குறிப்பாக அண்மையில் மாலை தீவுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் இந்தியா இலங்கை மீது தனது கவனத்தை அதிகம் குவிக்க விரும்பும். மாலை தீவுகளில் கடந்த செப்டம்பர் நடந்த பொதுத் தேர்தலில் சீனாவுக்கு சார்பான ஒரு தலைவர் வெற்றி பெற்றிருக்கிறார். "மாலதீவில் உள்ள இந்திய படைகளை வெளியேற்றுவோம்" என்ற கோ'த்தோடு அவர் தேர்தலில் போட்டியிட்டார்..2008 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுகளாக அங்கே சீனாவுக்கு சார்பான ஓர் எதேச்சாதிகாரி ஆட்சியில் இருந்தார். 2018 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அவர் தோல்வியடைந்தார். அத்தேர்தலில் இந்தியாவுக்குச் சார்பாக ஒரு தலைவர் வெற்றி பெற்றார். அவர் இந்திய துருப்புக்களை நாட்டுக்குள் இறக்கினார். நாட்டின் கப்பல் கட்டும் துறைமுகங்களைக் கட்டியெழுப்புவதற்கே இந்தியத் துருப்புக்கள் வந்திருப்பதாக அவர் விளக்கமும் கொடுத்தார். துறைமுகங்கள் கட்டி முடிக்கப்பட்டதும் இந்தியத் துருப்புக்கள் வெளியே போய்விடும் என்றும் வாக்குறுதியளித்தார். எனினும், இந்தியத் துருப்புக்களை வெளியேற்றுவோம் என்ற வாக்குறுதியை வழங்கிய, சீனாவுக்கு நெருக்கமான ஜனாதிபதி வேட்பாளர் கடந்த செப்டம்பர் மாதம் வெற்றி பெற்றிருக்கிறார்.

மாலை தீவுகளில் சீனா ஏற்கனவே பலமாகக் காலூன்றி விட்டது. இலங்கைத் தீவைப் போலவே மாலை தீவுகளும் சீனாவின் கடனாளிதான். இப்பொழுது மாலத்தீவுகளில் இந்தியாவின் பிடி ஒப்பீட்டளவில் தளர்ந்து போய்விட்டது. இந்நிலையில் இலங்கைத் தீவிலும் இந்தியாவின் பிடி பலமாக இல்லை என்பதைத்தான் இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி சீனக் கப்பல் இலங்கை கடற்பரப்புக்குள் வர அனுமதிக்கப்பட்டமை உணர்த்துகின்றதா?

இப்படியாக இரண்டு பேரரசுகளும் இலங்கை மீதான தமது பிடியை பலப்படுத்த எத்தனிக்கும் ஒரு காலச் சூழலில் தமிழ் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் ? நிர்மலா சீதாராமன் தமிழ் மக்கள் பிரதிநிதிகளை சந்திக்கவில்லை. சீனா ஜெனிவாவில் மிகத் தெளிவாக அரசாங்கத்தின் பக்கம் நிற்கின்றது. இந்நிலையில் தமிழ் நோக்கு நிலையில் இருந்து இந்த இரண்டு பேரரசுகளையும் கையாள்வதற்கு தேவையான உபாயங்களை வகுப்பது யார்?

---



# திருமலை பற்றி எரிகிறது சம்பந்தன் ஐயா கொழும்பில் பிடில் வாசிக்கிறார்!

- நக்கீரன் -

கொழும்பில் இருந்து இயங்கும் நியூஸ் 1 (News1st) என்ற செய்தித் தொலைக்காட்சியில் ஒவ்வொரு புதன்கிழமையும் நடைபெறும். நிகழ்ச்சியின் பெயர் தேசத்தை எதிர்கொள்ளுங்கள் (FACE THE NATION என்பதாகும். அந்த வாரத்தில் ஊடகங்களில் பெரிதாக அலசப்படும் முக்கிய பேசுபொருளில் அந்தந்த துறைசார்ந்த அறிவாளிகளை அழைத்து விவாதம் நடைபெறும். அந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளர் (Anchor) பெயர் ஷமீர் ரசூல்தீன் (Shameer Rasooldeen). பெரும்பாலும் விவாதங்கள் பக்க சார்பில்லாமல் இருக்கும்.

இந்த நியூஸ் ஃபர்ஸ்ட் (News1st) என்பது கப்பிட்டல் மகாராஜா (Capital Maharajah Organization Ltd) என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு இலங்கைச் செய்தி நிறுவனமாகும். நியூஸ் 1 முதன்மையாக செய்திகளை ஒளிபரப்புகிறது, மூன்று தொலைக்காட்சி சனல்களில் சிராசா டிவி, சக்தி டிவி, டிவி 1 (Sirasa TV, Shakthi TV, TV 1) அய்ந்து வானொலி சேனல்கள் சிராசா எஃப்எம், யெஸ் எஃப்எம், சக்தி ஃஎவ்எம், வய் FM மற்றும் லெஜண்ட்ஸ் எஃப்எம் (Sirasa FM, Yes FM, Shakthi FM, Y FM and Legends FM), சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் மூன்று வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடக தளங்கள் (யூரியூப், முகநூல், ட்விட்டர்).




கடந்த ஒக்தோபர் 18, 2023 அன்று அந்தத் தொலைக்காட்சியில் நடந்த விவாதத்தின் தலைப்பு "Looking for corruption in all the wrong places" (“அனைத்து தவறான இடங்களிலும் ஊழலைத் தேடுகிறோம்”) என்பதாகும். அதில் எரான் விக்கிரமரத்தின (நா.உ - ஐமச) Dr. ஹரினி அமரசூரிய (நா.உ - தேசிய மக்கள் சக்தி) எம்.ஏ. சுமந்திரன் (நா.உ - ததேகூ) சட்டத்தரணி ஷிரால் லக்திலக (மூத்த துணைத் தலைவர் ஐக்கிய குடியரசு முன்னணி) ஆகியோர் விவாதித்தில் கலந்து கொண்டனர்.

விவாதத்தின் இறுதிக் கட்டத்தில் அந்தத் தொலைக்காட்சியின் பார்வையாளர் ஒருவர் மின்னணு மூலம் எழுப்பிய கேள்வியின் அடிப்படையில் செய்தித் தொகுப்பாளர் ஷமீர் ரசூல்தீன், இந்தக் கேள்வி சுமந்திரனுக்கு எங்கள் பார்வையாளர்களில் ஒருவரிடமிருந்து வந்தது என்று கேட்ட கேள்விக்கு சுமந்திரன் சுருக்கமாகப் பதில் அளித்தார். சுமந்திரன் அளித்த பதிலைத் தொலைக்காட்சியில் பார்காதவர்களும் அரைகுறையாக செய்தித்தாள்களில் வாசித்தவர்களும் “சம்பந்தன் பதவி விலக வேண்டும்” தொடர்பாக தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

சுமந்திரன் பதவி விலக வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிய சம்பந்தன் ஐயாதான் முடிவெடுக்க வேண்டும், தமிழ் அரசுக் கட்சியோ அல்லது மற்றவர்களோ அது பற்றிப் பேசக் கூடாது என்று சொன்னவர்களும் இருக்கிறார்கள்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட நா.உ விக்னேஸ்வரன் “சம்பந்தன் தமிழரின் அடையாளம்! அவர் பதவி விலகத் தேவையில்லை, அவரைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. சம்பந்தனின் நாடாளுமன்றக் காலம் 2025 வரை இருக்கிறது” என்றார். அடேங்கப்பா! சம்பந்தன் ஐயா மீது விக்னேஸ்வரனுக்கு பாசம் பொங்கி வழிகிறது. அவரது அருமை பெருமை தெரிகிறது. ஆனால் இதே விக்னேஸ்வரன்தான் தமிழரசுக் கட்சியை உடைத்தவர். புதிய கட்சியை தொடக்கியவர். கையைப் பிடித்து அரசியலுக்கு இழுத்து வந்து வடமாகாண சபையின் முதலமைச்சராக மகிடம் சூட்டி அழகு பார்த்த சம்பந்தன் ஐயாவுக்கு “உனக்குப் பேப்பே!” உனது அப்பனுக்கும் பேப்பே” என்ற சொன்னவன் மாதிரி “வட மாகாண சபைக்கு நடந்த தேர்தலில் எனக்கு 132,255 விருப்பு வாக்குகள் கிடைத்தது. இது எனது சொந்தச் செல்வாக்குக் காரணமாகக் கிடைத்த வாக்குகள். தமிழ் அரசுக் கட்சியால் கிடைத்த வாக்குகள் அல்ல” என மார் தட்டினார். 2020 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் அவரது தமிழ் மக்கள் தேசிய முன்னணி போட்டியிட்டது. விக்னேஸ்வரன் திருகோணமலை சென்று தனது கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகப் பரப்புரை செய்தார். சம்பந்தனுக்கு வயதாகிவிட்டது. அவர் அரசியலில் இருந்து ஓய்வு எடுக்க வேண்டும். அவர் தேர்தலில் போட்டியிடக் கூடாது, போட்டியிலிருந்து விலக வேண்டும்” என்று மேடைகளில் முழங்கினார். அவர்தான் இப்போது சம்பந்தன் தமிழர்களின் அடையாளம் என்கிறார்!



2015 இல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க “வீட்டை விட்டு வெளியே வந்து வாக்களியுங்கள்” என்று அன்றைய முதலமைச்சர் விக்னேஸ்வரன்தான் இரட்டை அர்த்தத்துடன் கொழும்பில் இருந்து ஒரு அறிக்கை விட்டார். இந்த அறிக்கையே விக்னேஸ்வரனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் விரிசல் இருப்பது வெளியுலகத்துக்கு தெரியவந்தது. இப்போது “சம்பந்தன் தமிழரின் அடையாளம்! அவர் பதவி விலகத் தேவையில்லை” எனக் குடம் குடமாக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்.

இன்னொருவர் கொழும்பு தமிழ் அரசுக் கட்சியின் ஆயுட்காலத் தலைவர் சனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா. இவர் ஓய்வுநேர நாற்காலி அரசியல்வாதி. நாய்க்குக் கல்லெறி எங்கே பட்டாலும் காலைத்தான் தூக்குமாம். சுமந்திரன் எது செய்தாலும் செய்யாவிட்டாலும் முதல் கல்லை வீசுபவர் இவரே. 2020 இல் நடந்த தேர்தலில் தொலைக்காட்சி, ஊடகவியலாளர் மநாடு எனக் கூட்டி அவர் இருக்கும் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் சுமந்திரன் மீது வசைபாடியவர். சேறு அள்ளிப் பூசினார். அதனைக் கட்சியின் தலைவர் கண்டு கொள்ளவில்லை என்பது இன்னொரு சோகம். தவராசா சொல்கிறார் “அரசியல் ரீதியில் இரா.சம்பந்தனை ஓரங்கட்டிவிட்டு கட்சியின் மொத்தக் கட்டுப்பாட்டையும் தனது பிடிக்குள் கொண்டுவர எம்.ஏ.சுமந்திரன் சூழ்ச்சி செய்கிறாராம்!” சம்பந்தன் ஐயாவை எப்படி சுமந்திரனால் ஓரங்கட்ட முடியும்? சம்பந்தன் ஐயா கட்சியில் எந்தப் பதவியிலும் இல்லை. கட்சி அவர் கட்டுப்பாட்டிலும் இல்லை. இவரைப் பொருட்படுத்தத் தேவையில்லை.

இப்படி சுமந்திரன் மீது வசைபாடுபவர்கள் அந்தத் தொலைக்காட்சியில் சம்பந்தன் ஐயா தொடர்பாக ஒரு பார்வையாளர் கேட்ட கேள்விக்கு "Some of us in the party about a year ago when we spoke to him and asked him to step down" (“ஓராண்டுக்கு முன்பு கட்சியில் இருந்த சிலர் அவரிடம் பேசி அவரைப் பதவி விலகச் சொன்னோம்”) என்ற பதிலை வசதியாக மறந்து விட்டு “சுமந்திரன் சம்பந்தனைப் பதவி விலகக் கேட்கிறார்” என ஒரே குரலில் ஒப்பாரி வைக்கிறார்கள். “கட்சியில் இருந்த சிலர் அவரிடம் பேசி அவரைப் பதவி விலகச் சொன்னோம்” எனப் பன்மையில் விடையளித்தார். “நான் பதவி விலகச் சொன்னேன்” என அவர் சொல்லவே இல்லை.

சம்பந்தன் ஐயாவை பதவி விலகக் கேட்பது என்ற தீர்மானம் கடந்த செப்தெம்பர், 2022 இல் வவுனியாவில் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் நிறைவேற்றப்பட்டது. அதே மத்திய குழுக் கூட்டத்துக்கு வந்திருந்த திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்கள் பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டினார்கள். திருகோணமலையில் தற்போது தமிழர் பிரதேசங்களும், தமிழர் வழிபாட்டு இடங்களும் திட்டமிட்டு பவுத்த மயமாக்கப்படும் நிலையில், அங்கு செயற்திறன் மிக்க மக்கள் பிரதிநிதி ஒருவர் தேவை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அண்மையில் திருகோணேஸ்வரர் ஆலயத்தின் காணிகளைக் கையகப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை முன்வைத்த அவர்கள், சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய உடல் நலத்துடன் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்கர்.

இந்த நிலைமையால் திட்டமிட்ட சிங்கள - பவுத்த ஆக்கிரமிப்பை எதிர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். மூப்புக் காரணமாக உடல் நிலை தளர்வடைந்துள்ள இரா. சம்பந்தன், நாடாளுமன்ற அமர்வுகளில் சீராகக் கலந்துகொள்வதும் நடைமுறைச் சாத்தியமற்றதாகவுள்ளது எனக் கூறினர்.

இதுவரை நடந்த நாடாளுமன்ற அமர்வுகளில் அவர் சிலவற்றிலேயே கலந்துகொண்டுள்ளார். அதனால் மாவட்டத்தின் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசுவதற்காக சந்தர்ப்பங்களும் குறைந்துள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இவை தொடர்பாகக் ஆராந்த மத்திய குழு, இரா.சம்பந்தனிடம் பதவி விலகுவது தொடர்பாக அவருடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குழுவொன்றை நியமித்தது. அதன் உறுப்பினர்கள் பின்வருமாறு:

வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நா. உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம். (https://ibctamil.com/article/sambandhan-left-political-1663724715_)

இதனை அடுத்து இந்தக் குழு கட்சியின் பொதுக் குழுவில் எடுத்த முடிவின் அடிப்படையில், கட்சித் தலைவர் சேனாதிராசாவும் கட்சியின் உப தலைவர் சுமந்திரன் இருவரும் சம்பந்தன் ஐயாவை அவரது கொழும்பு இல்லத்தில் சந்தித்து அவரது உடல்நிலையை காரணம் காட்டி அவர் பதவி விலக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் “எனக்கு வாக்களிதபோது திருகோணமலை வாக்காளர்களுக்கு எனது உடல்நிலை பற்றித் தெரியும். தெரிந்துதான் வேட்பாளர் பட்டியலில் முதல் இடத்தில் இருந்த எனக்கு வாக்களித்து தெரிவு செய்தார்கள். எனவே தன்னை விலகுமாறு கட்சி கேட்க முடியாது” எனக் கூறிவிட்டார்.

இதுதான் நடந்தது. ஆனால் ஊடகங்கள் மனம்போன போக்கில் “வளர்த்த கிடாய் மார்பில் பாய்ந்தது”, “சம்பந்தனை ஓரங்கட்டி தலைமை யை பிடிக்க சூழ்ச்சி செய்யும் சுமந்திரன்!” என கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் சிலர் விமர்சனம் செய்தார்கள். கட்சித் தலைமையை பிடிப்பதற்கு சுமந்திரன் ஏன் சம்பந்தன் ஐயாவை ஓரங்கட்ட சூழ்ச்சி செய்ய வேண்டும்? தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கும் சம்பந்தன் ஐயா அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? மறுபுறம் கட்சியின் தலைமைப் பதவியைப் பிடிக்க சம்பந்தன் ஐயாவை பகைக்காமல் தன் பக்கம் வைத்திருப்பதுதானே புத்திசாலித்தனம்? அவருக்கு அனுகூலம்? மேலும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு சுமந்திரன் போட்டியிட முன்வந்தால் அதில் என்ன பிழை இருக்கிறது? அதென்ன பஞ்சமா பாதகமா?

சுமந்திரன் அவர்களுக்கு தலைமைப் பதவிக்கு வருவதற்கான எல்லாத் தகுதிகளும் குணங்களும் அவரிடம் இருக்கிறது. பூகோள அரசியல், சட்ட அறிவு, மும்மொழிப் புலமை, கடினமான உழைப்பு, நேர்மை எல்லாம் அவரிடம் இருக்கிறது. எது எப்படியிருந்தாலும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு யாரைத் தெரிவு செய்வது என்பது அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் தீர்மானிப்பார்கள். மற்றவர்கள் தங்கள் தூக்கத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

உண்மை என்னவென்றால் சுமந்திரன் எதைச் சொன்னாலும் என்ன செய்தாலும் அதில் நொட்டை சொல்ல, குற்றம் பிடிக்க, சேறு பூச கட்சிக்குள்ளேயும் வெளியேயும் சிலர் நாயாய் பேயாய் அலைகிறார்கள்! அவர் மீது பாய்ந்து பிராண்டுகிறார்கள்! ஆனால் எதையும் ஒளிவு மறைவின்றி அறம் சார்ந்து நேர்படப் பேசுவது அவரது பாணி. அவருக்கு உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் வித்தை தெரியாது. அவர் ஒரு வித்தியாசமான அரசியல்வாதி. தமிழ்மக்களின் நலன்கள்தான் அவருக்கு முக்கியம். தனிப்பட்டவர்களது நலன்கள் முக்கியம் இல்லை. அதனால் சிலரது கோபத்துக்கும் தாபத்துக்கும் ஆளாக வேண்டியிருக்கிறார். ஆனால் அது பற்றி அவர் கவலைப்படுவதில்லை. அரசியலில் சிலர் கல்லெறிவார்கள். சிலர் மாலை போடுவார்கள். இரண்டையும் ஒன்றாகப் பார்க்க வேண்டும்.

கடந்த ஒக்தோபர் 18,2023 அன்று FACE THE NATION தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒரு பார்வையாளர் சம்பந்தர் ஐயா மின்னணு மூலம் “நாடாளுமன்றம் 288 நாட்கள் கூடியுள்ள நிலையில், இரா. சம்பந்தன் 39 நாட்கள் மாத்திரமே முன்தோன்றி இருந்தார், அதாவது 13.6%. அவருக்கு வழங்கப்பட்ட மொத்த தொகை உரூபாய் 4 மில்லியன். தொலைபேசி, அலுவலகம் மற்றும் போக்குவரத்து போன்ற கொடுப்பனவுகளுக்கு மாதமொன்றுக்கு உரூபா 419,000. இது வரி செலுத்துவோரின் பணம். இது மற்றொரு வரை ஊழல். அது சரியா? என சுமந்திரனைப் பார்த்துக் கேட்டார். அதற்கு சுமந்திரன் அளித்த பதிலை அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்)




## கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
## Canadian Tamils Remembrance Organization

www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

# அறிவித்தல்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.
கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

**மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்-19.11.2023.**

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் நினைவேந்தல் எதிர் வரும் **19.11.2023** ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அறியத் தருகின்றது.

மாவீர்களுக்கான வீர வணக்க நினைவேந்தல்,காலை **10.00** மணிக்கு ஆரம்பமாகி மதியம் **2.00** மணி வரை தொடர்ந்து நடை பெறும்.

மாவீரர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் இந்த நாளில் ஒன்றிணைந்து நின்று மாவீரர்களை நினைவேந்துவோம்.

மண்டப முகவரி: **Metropolition Centre. 3840 Finch Ave. East, M1T 3T4**

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.
நன்றி. வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619 **ctro@tamilremembrance.com**



இங்கே பதிவு செய்யப்படும் பதிவு ஓர் காதல் கதை. இது 1985-1990 ம் இடையிலான காலகட்டத்தை சார்ந்த ஓர் கற்பனைக் கதை. இச்சிறு கதையின் மூலம் பெற்றோரிற்கான அருமையான தகவல் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் எக்காலத்திற்கும் பொருத்தமானதே. இதனை ஓர் நாடக ரூபத்தில் தருகிறேன். ஆரம்பத்தில் சிறுது சலிப்பாக இருந்தாலும் போகப்போக சுவாரஸ்யமாக இருக்கும். இதோ நீங்கள் ஆவலுடன் காத்திருக்கும்,

# "நின்னை சரணடைந்தேன்"

*(சென்ற வார தொடர்ச்சி...)*

**கதாபாத்திரம்:**

| | |
|---|---|
| கதாநாயகன் | - கணேஷ் |
| கதாநாயகி | - மதுமிதா |
| கணேஷின் தந்தை | - சரவணமுத்து |
| தாயார் | - தருமவதி |
| மதுமிதாவின் தந்தை | - வேலாயுதம் |
| தாயார் | - சுசீலா |
| மதுமிதாவின் நண்பிகள் | - தாரணி, வாசுகி |
| மதுமிதாவின் வில்லி | - பொன்மதி |
| அதிபர் | - மிஸ் சோமசுந்தரம் |
| கனடா மாப்பிள்ளை | - பிரபா |

---------------

**காட்சி - 8**

---------------

[பொன்மதி அதிபர் திருமதி. சோமசுந்தரம் ஆபிஸ் றூம் நோக்கி செல்கிறாள்]

அதிபர்: இஞ்சை வாரும். ஏன் வந்தனீர்? உமக்குப் பெயர் என்ன?

பொன்மதி: பொன்மதி. மிஸ், என்னெண்டா..... என்னெண்டா..... எங்கட வகுப்பு மதுமிதா..... அவ இப்ப முந்தி மாதிரி இல்லை. அவ பிழை செய்யிறா.

அதிபர்: என்ன பிழை? அந்தப்பிள்ளை கெட்டிக்காரி. நல்ல ஒழுக்கமான பிள்ளை எண்டு எல்லாருக்கும் தெரியும். அதுமட்டுமல்ல நல்ல results வேற எடுத்திருக்கு. உமக்குத்தான் அந்தப்பிள்ளையோடை ஏதோ பிரச்சனை போலிருக்கு.

பொன்மதி: இல்லை மிஸ், உண்மையாகத்தான் சொல்லுறன். அவவுக்கு ஒரு boyfriend இருக்கு. ரெண்டுபேரும் தனியா சந்தித்து கதைத்ததை என்ரை ரெண்டு கண்ணாலும் கண்டனான். எங்கட school க்கு கூடாத பெயர் வரக்கூடாது எண்டுதான் சொல்லுறன்.

அதிபர்: சரி நீர் ஒருக்கா மதுமிதாவை நான் வரச்சொன்னனான் எண்டு போய்சொல்லும். (தனக்குள்ளே)

அட இந்தப்பிள்ளை இப்படிச்செய்யும் எண்டு நான் கனவிலேயும் நினைக்கேல. வரட்டும் வரட்டும்... சரியா விசாரிச்சிப்போட்டு உதுக்கொரு முடிவு எடுக்கிறன்.

[முயல் சிங்கத்திடம் பயந்து பயந்து வருவதுபோல மது அதிபரிடம் வருகிறாள்]

அதிபர்: என்ன மதுமிதா? என்ன நடக்குது? நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா? உண்மையைச்சொல்லும். உமக்கு boyfriend இருக்காமே, தெருவெல்லாம் நிண்டு கதைக்கிறீராமே.

மது: அது வந்து....அது வந்து மிஸ்..... சாரி மிஸ்.... சாரி இனிமேல் நான் ஒரு பிழையும் செய்ய மாட்டேன் மிஸ் அந்த boy ஐ மறந்திறேன் miss.... சாரி மிஸ்.

அதிபர்: அப்ப பொன்மதி சொன்னதெல்லாம் உண்மைதான். யார் அந்தப்பெடியன்?

மது: அந்த boy என்ரை tuition இல படிக்கிறவர் மிஸ்.

அதிபர்: சரி, ஆராய் இருந்தா எனக்கென்ன. உம்மை tuition க்கு உம்மடை பெற்றார் இதுக்கோ அனுப்பினவயல்? நீர் நல்ல பிள்ளை எண்டு எல்லோ நம்பிக்கொண்டிருக்கினம். படிச்சா மட்டும் போதாது, பெற்றோருக்கு துரோகம் செய்யக்கூடாது. எதுக்கும் உம்மட parents ஐ என்னை வந்து சந்திக்கச்சொல்லும்.

மது: சாரி மிஸ், என்ரை அம்மா அப்பாக்கு தயவுசெய்து சொல்லாதையுங்கோ மிஸ். அவையள் என்னை கொண்டிடுவினம். (மது அழுதாள்)

அதிபர்: மதுமிதா, சொல்லவேண்டியது என்ரை கடமை. நீர் நாளைக்கு உம்மோடே parents உடன் வாரும்.

[மதுவும் அதிபரும் கலைந்து செல்கின்றனர்.]

---------------

**காட்சி - 9**

---------------

[ஏதோஒரு காரணம் சொல்லி மது தகப்பனாரை அதிபரிடம் அழைத்து வந்தாள்.]

அதிபர்: Mr. வேலாயுதம், உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேணும். இதைக்கேட்டு நீங்கள் அதிர்ச்சி அடையக்கூடாது. நீங்கள் படித்தவர், இந்த விஷயத்தை பக்குவமா handle பண்ணுவீர்களென நம்பிறன்.

வேலாயுதம்: என்ன மிஸ். சோமசுந்தரம் அப்பிடி? எனக்கு ஒண்டும் விளங்கவில்லை. மதுமிதா எதுவுமே சொல்லவில்லை எனக்கு. அப்படி என்ன விஷயம்?

அதிபர்: உங்கடை மகள் மதுமிதா... நான் இதை எப்படி சொல்லுவன்? மதுமிதா ஒரு பையனுடன் சகவாசம் வைக்க தொடங்கி விட்டா. அதாவது அவ ஒரு boy ஐ விரும்பிறா.

வேலாயுதம்: மிஸ் என்ரை பிள்ளை மதுமிதா அப்பிடிச்செய்ய மாட்டா. இது யாரோ அவள்மேல் உள்ள கோபத்தில் உங்களுக்கு சொன்ன கட்டுக்கதை. இதை நான் கடைசி வந்தாலும் நம்பமாடடேன்.

அதிபர்: மிஸ்டர். வேலாயுதம் ஆரம்பத்தில் நானும் அப்படித்தான் நினைச்சனான். ஆனால், மதுமிதாவே உண்மையை ஒப்புக்கொண்டபிறகு என்னெண்டு நம்பாமல் இருக்கிறது சொல்லுங்கோ பாப்பம்.

[தந்தை மதுவை பார்க்கிறார் .... மது கீளே குனிகிறாள்]

வேலாயுதம்: சரி மிஸ் இதைப்பற்றி நான் வீட்டில் கதைத்து ஒரு நல்ல முடிவு எடுக்கிறேன்.

[அதிபர் வேலாயுதம் மது மூவரும் கிளம்பி செல்கின்றனர். ...வீடு வந்து சேர்ந்தனர். அம்மா வீடு கூட்டுகிறார்...]

---------------

**காட்சி - 10**

---------------

வேலாயுதம்: ஐயோ எல்லாம் முடிஞ்சுது.... எல்லாம் முடிஞ்சுது!

சுசீலா: என்னப்பா? என்னப்பா? என்ன நடந்தது? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்கோவன், போன காரியம் என்னாச்சு? ஏன் தலையில கையை வைக்கிறியள்?

வேலாயுதம்: நீ உவளைக்கேள். உதுக்குத்தான் ஆரம்பத்தில் இருந்தே சொன்னனான் எதுக்கும் கண்ணும் கருத்துமா இரு எண்டு.

சுசீலா: இப்ப என்ன நடந்து போச்சுது எண்டு என்னையும் பிள்ளையையும் பேசிறியள்? இப்பதானே நல்ல results வந்து எல்லாரும் வீடோடை சந்தோஷமா இருந்தனாங்கள். ஆற்றை கண் பட்டதோ?? கடவுளே! என்னடி? என்ன செய்தனி? சொல்லித்துலையான்.

[மது விக்கி விக்கி அழுகிறாள் ......]

மது: அம்மா நான் தப்புப் பண்ணீட்டேன் அம்மா..... தப்பு பண்ணீட்டன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ!

சுசீலா: அப்படி என்ன பிழை செய்தனி? சொல்லன்....

வேலாயுதம்: நான் சொல்லுறன் கேள்..... அவளுக்கு boyfriend இருக்காம் ... ஏதோ tuition இல படிக்கிற பெடியன-ாம். மானம் எல்லாம் போச்சுது!

சுசீலா: boyfriend ஓ! என்ரை கடவுளே உன்னை நான் எவ்வளவு நல்ல பிள்ளை எண்டு நம்பி இருந்தான். என்னப்பா இப்ப என்ன செய்யிறது?

வேலாயுதம்: என்ன செய்யிறதோ .... போ... போய்க் கலியாணம் கட்டி வை சொல்லிப்போட்டன் இவள் இனி ஒரு இடமும் படிக்கப்போக கூடாது. நீ போ போய் வேலையைப்பார்.

[மூவரும் கலைந்து செல்கின்றனர் .....]

---------------

**காட்சி - 11**

---------------

மதுவை தொடர்ந்து படிக்கவிடாமல் பாடசாலையிலிருந்து மறிக்கின்றார் வேலாயுதம். மதுவின் வாழ்க்கை தலைகீழாக மாறுகிறது. நடுக்காட்டில் கண்ணைக்கட்டி விட்டது போலாயிற்று. அவள் கூண்டிற் கிளியானாள்.

[தாரணியும் வாசுகியும் வருகிறார்கள் ..... வழமைபோல் கணேஷ் காத்து நிக்கிறான்]

கணேஷ்: தாரணி மது ஏன் வரவில்லை?

தாரணி: ஐயோ கணேஷ் உங்கடை ரெண்டுபேருடைய விஷயம் மதுவின்ரை அப்பா அம்மா க்கு தெரிஞ்சு போச்சுது. எல்லாத்துக்கும் அந்த பொன்மதிதான் காரணம். அதிபருக்கு சொல்லி அதிபர் மதுவின்ரை அப்பாவை கூப்பிட்டு எல்லாத்தையும் சொல்லிப்போட்டா. அதுக்குப் பிறகு மதுவை அப்பா school க்கு போகாம மறிச்சு போட்டார்.

கணேஷ்: உண்மையாகவே? oh my god இப்ப என்ன செய்யலாம் தாரணி? எதாவது ஒரு வழி சொல்லும். எனக்கு மதுவை பாக்கணும்...மதுவை நான் இப்ப பாக்கணும்.

தாரணி: ப்ளீஸ் கணேஷ் ...வீட்டில மதுவுக்கு இப்ப நிறையப் பிரச்சனை. நீங்கள் கொஞ்சம் பொறுமையா இருக்கணும். அதுதான் எனக்கு சரி எண்டு படுது. கொஞ்ச நாளைக்கு மதுவை மறந்து இருக்க வேணும் நீங்கள்.

கணேஷ்: எப்படி தாரணி?? எப்படி என்னால மறக்க முடியும்? சரி, என்ரை மதுவுக்காக கொஞ்சநாளைக்கு எந்த கரைச்சலும் கொடுக்காமல் ஒதுங்கி இருக்கிறன்.

[கணேஷ் தாரணி வாசுகி மூவரும் அவ்விடம் விட்டு கலைந்து செல்கின்றனர்]

[அடுத்து இங்கே நீங்கள் காண்பது கணேஷின் அப்பா சரவணமுத்து அம்மா தருமவதி. அப்பா ஓர் வியாபாரி. நடுத்தர குடும்பம். மிகவும் அப்பாவிகள். மகன்மீது உயிரையே வைத்திருக்கிறார்கள்.]

[மகன் கணேஷைக் காணவில்லை எண்டு அங்கும் இங்கும் முற்றத்தில் உலாவுகின்றன....கணேஷ் வருகிறான்]

*(தொடரும்...)*

**நன்றி!**

**அன்புடன் திருமகள், ரமேஷ்**

---

## தீபஒளித் திருநாள்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---------------------------


தீபஒளித் திருநாள் தித்திக்கும் பெருநாள்
பாபங்கள் நீங்கிய புனித நன்நாள்
கோபங்கள் தொலையக் குளிர்ந்த நீராடி
தீபங்கள் ஏற்றியே திருப்தி கொண்டோம்
புத்துடை அணிந்து பூரிப்புப் பெற்றோம்
மத்தாப்புக் கொளுத்தி மகிழ்ச்சியும்
அடைந்தோம்
கோவில் சென்று கோவிந்தனைத் தொழுது
மாவிளக் கேற்றி மனநிறைவு கொண்டோம்
பட்சணம் செய்து பகிர்ந்து உண்டோம்
விட்ட உறவுடன் விரும்பி இணைந்தோம்
சொந்தம் எல்லாம் சோதரராய்க் கூடியே!
சந்தோசம் மிகிந்திட சரசம் செய்தோம்
விருப்புடன் உணவுகள் வீட்டில் செய்தே!
விருந்தினர் அழைத்து விருந்து கொடுத்தோம்
பாட்டுப் பாடியும் பகடிகள் சொல்லியும்
ஆட்டம் போட்டும் ஆனந்தம் கொண்டோம்
சிறுவர்கள் சேர்ந்தே சீனவெடி வெடித்தனர்
சிறுமிகள் கூடியே சடுகுடு ஆடினர்
பல்லிலா பாட்டன் பாட்டிகள் எல்லாம்
செல்லக் கதையுடன் சிரித்து மகிழ்ந்தனர்
எப்போது வருமென ஏங்கும் இந்நாள்
இப்போ நினைத்தால் இதயம் இனிக்குதே!
வருடம் ஒருநாள் வந்திடும் திருநாள்
விருப்பொடு நாமெலாம் விசாகமாய் போற்றுமே!.

விகாசம் – – – – – முகமலர்ச்சி

---------------------------

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
416) 844-7453

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்
மெய்நிகர் வழியாக நடத்தும்



எழுத்தாளர் அரங்கம் - 15
நவம்பர் 10, 2023 வெள்ளிக்கிழமை மாலை 7 மணி
(Eastern Time US/Canada)

உரையாளர்
எழுத்தாளர் வைரமுத்து திவ்வியராஜா

புகழ்பெற்ற கனடாத் தமிழ் எழுத்தாளர், பன்முகக் கலைஞர்
வைரமுத்து திவ்வியராஜா
அவர்களின் படைப்புகள் பற்றியும், எழுத்துப்பயணம் பற்றியும்
செவிமடுத்துப் பயனடைவோம். நிகழ்வில் கலந்து சிறப்பிக்க
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அகணி சுரேஸ், தலைவர்
கமலவதனா சுந்தா, செயலாளர்
அருட்கவி ஞானகணேசன், பொருளாளர்

Meeting ID: 885 0662 6572
Passcode: 2023

## கடந்தவையும் கடப்பவையும் - (76)

நேரான பாதையிலே நீளமாயொரு பந்தல் - அதன்
ஓரமாய் கடைகள் சில கலகலப்பாய்

உடனுக்குடன் வறுக்கும் கச்சானின் மணமும் - அழகாக
அடுக்கிவைத்த இனிப்புக்களின் இரகமும் மனதை - ஒருபுறம்

சின்னப்பிள்ளை போல் இழுத்துச்செல்ல - மறுபுறம்
முன்னுக்குப் போபவர் பின்னால் வரும்படி வெருட்டிச்செல்கிறார்

புற்றீசல்போல் பெருவாரி சனக்கூட்டம்
பட்டென்று வந்து வந்து கூடியதால்

பரந்திருக்கும் பால் நிறத்துப் பெருவீதி
நிறைந்து வழியும் அழகே தனி - முன்னால்

விறுவிறென்று போனவரும் கால்கழுவ
பெறுமையுடன் நிற்பதனால் கூடியாச்சு ஒன்றாக

கால்கழுவும் பழக்கம் கனடாவில் இல்லை - பிள்ளைகள்
கால் நனைக்கப் படும்பாடோ பெரும்பாடு

பல்வேறு நாட்டுப் பாசைகளும் கேட்கிறது ஓரிடத்தில்
நல்லாகத்தான் இருக்கிறது செல்லத்தமிழும் இடையிடையே

மூன்று மகள்களும் கால்கழுவக் காத்திருந்து - பின்
மன்றாடிக் கேட்கிறார் அம்மா உள்ளுக்குள் போவதற்கு

சனக்கூட்டம் அதிகமென்று மறுக்கிறார்கள் பிள்ளைகள்
மினக்கட்டு வந்துவிட்டு வெளியில் நிற்பதில்

உடன்பாடு இல்லாத அம்மா உறுமுகிறார்
'சனக்கூட்டம் குறையட்டும் வருகிறோம்' என்கிறார்கள்

அன்று,

முண்டியடித்து முதல் விளக்கைப் பார்த்த கூட்டம்
குண்டூசியும் கைகளுமாய் திரிந்த கூட்டம் - இன்று

பத்திரிகையில் பலதையும் பார்த்த பின்பும் - இன்னமும்
பக்தியில் முத்தித்தான் திரிகிறது

தள்ளுப்பட்டு கிள்ளுவாங்கி பின்வாங்கவில்லை - பிள்ளைகள்
மெள்ள வரிசையில் நின்று வழிபட்டு பழகியதால் கேட்கிறார்கள்

புரியவேண்டும் அம்மாவுக்கு , இன்றிவரைக் கிள்ளிவிட்டால்
திரிப்பி நுள்ள வயசும்இல்லை துணிவுமில்லை - அன்று

அக்காமார் இருந்தார்கள் கண்யாடை காட்டிவிட்டால்
அப்படியே பின்தொடர்ந்து பிறர் கண்படாமல்

கிள்ளிப்பார்த்தவரை தள்ளிக்கொண்டு போவதற்கும்
சொல்லுக் கேட்கார் என்றால்

கேட்கும் இடத்தினில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கும்
அத்தனையும் தெரிந்தவர்தான் இந்த அம்மா - அதனாலோ

படிப்படியாய் மனம்மாறி கூட்டம் குறையப் போவோமென
முடிவொன்றை எடுத்தவராய் மரத்தடியில் அமருகிறார்

அம்மாவாய் இருந்ததனால் உணர்ந்து அவர் அமருகிறார்
அப்பாவாய் இருந்திருந்தால் விரைந்துதான் போகவேண்டும் - பின்னால்

எங்களைப்போல் .........

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

## கண்ணீர் அஞ்சலி #60



மலர்வு
19
-
11
-
1930

உதிர்வு
17
-
10
-
2023

### திருமதி. பரமேஸ்வரி தியாகராஜா

எங்கள் OSTBA உறுப்பினர் #160
ஐப்பசி 17, 2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போம்.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION
OSTBA2019@GMAIL.COM WWW.OSTB5.CA
416-473-6880

## கண்ணீர் அஞ்சலி #60



மலர்வு
07
-
05
-
1940

உதிர்வு
17
-
10
-
2023

### திருமதி. சிவபாக்கியம் சிவலிங்கம்

எங்கள் OSTBA உறுப்பினர் #305
ஐப்பசி 17, 2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின்
பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION
OSTBA2019@GMAIL.COM WWW.OSTB5.CA
416-473-6880

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

## WE DEAL WITH ALL BANKS

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage
Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1440 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 10, 2023

# Medical Faculty at University of Toronto's Scarborough Campus
# ஸ்காபரோ நகரில் அமையப்போகும் முதலாவது மருத்துவக் கல்லூரி

கனடா ஸ்காபரோ நகரில் முதன்முதலாக மருத்துவக் கல்லூரியை உருவாக்க அடித்தளமிட்டு ஒன்றாரியோ அரசாங்கம் வரலாறு படைத்துள்ளது. கனடாவில் ஒவ்வொரு மாகாணத்திலும் பல மருத்துவக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. ஆனால் தமிழ் மக்களும் ஏனைய பல்லினங்கள் சார்ந்த மக்களும் அதிகளவில் வாழும் ஸ்காபுறோ நகரில் இந்த மருத்துவக் கல்லூரி அமைய இருப்பது பல்லினக் கலாச்சாரத்திற்கு மதிப்பளிக்கும் கனடிய தேசத்திற்கு ஒரு சான்றாக விளங்கவுள்ளது (உள்ளே செய்தியும் மேலும் படங்களும் 6ம் பக்கத்தில்)




## கனடா" விழித்தெழு பெண்ணே" சர்வதேச பெண்கள் அமைப்பு" அமைப்பு நடத்திய தாயக வீணைக் கலைஞர் வாகீசனின் இனிய கச்சேரி





கடந்த வெள்ளிக்கிழமை 3ம் திகதி ஸ்கபாபுறோ சீனக் கலாச்சார மண்டபத்தில் கனடா 'விழித்தெழு பெண்ணே' சர்வதேச பெண்கள் அமைப்பு' அமைப்பு நடத்திய தாயக வீணைக் கலைஞர் வாகீசனின் இனிய கச்சேரி சிறப்பாகவும் மண்டபம் நிறைந்த ரசிகர்கள் மத்தியிலும் அரங்கேறியது.

விழித்தெழு பெண்ணே அமைப்பின் தலைவி சசிகலா நரேன் அவர்கள் இதற்குரிய ஏற்பாடுகளை தனது குழுவினரோடு இணைந்து நடத்தியிருந்தார்.

மேற்படி நமது தாயகத்தின் வீணைக் கலைஞர் வாகீசனுக்கு பக்கவாத்திய இசை வழங்க அரவிந்தன் தலைமையிலான 'மெகா ரியுனர்ஸ்' இசைக்குழுவினர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர்.

இங்கே காணப்படும் படங்களில் கலைஞர் வாகீசன் மற்றும் இலங்கையிலிருந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உமாச்சந்திர பிரகாஸ் ஆகியோரை உதயன் லோகேந்திரலிங்கம் அரசு சார்ந்த சான்றிதழ்களை வழங்கி கௌரவிப்பதையும். பிரதம விருந்தினர் வீணை வித்துவான் தனதேவி மித்ரதேவா அவர்களை சசிகலா நரேன் மற்றும் 'மெகா ரியுனர்ஸ்' அரவிந்தன் அவர்களை திருவாளர்கள் குலா செல்லத்துரை -சங்கர் நல்லதம்பி மற்றும் திருமதி சசிகலா நரேன் ஆகியோர் கௌரவிப்பதையும். வர்த்தகப் பிரமுகர் கிருஸ்ணகோபால் கலைஞர் வாகீசன் அவர்களுக்கு தங்க மோதிரம் ஒன்றை அணிவிப்பதையும் காணலாம். ---நன்றி புகைப்படங்கள் - ஐயா4யு-

## கனடா வந்துள்ள உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களுக்கான வரவேற்புபசாரத்தை நடத்திய கனடா – இலங்கை வர்த்தக அமைப்பு!



இலங்கையிலிருந்து கனடா வந்துள்ள ஊடகவியலாளரும் அரசியல் பிரமுகருமான உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களுக்கான வரவேற்புபசாரம் ஒன்றை நேற்று புதன்கிழமை (08-11-2023) அன்று கனடா-இலங்கை வர்த்தக அமைப்பு என்னும் நிறுவனம் நடத்தியது.

ஸ்காபுறோவில் நெற்வின் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த வரவேற்புபசாரத்திற்கு திரு. குலா செலலத்துரை தலைமை வகித்தார்.

## ஒன்றாக இணைந்து எமது மாகாணத்தை பலப்படுத்துவோம் என்கிறார் ஒன்றாரியோ மாகாணத்தின் நிதி அமைச்சர்

ஒன்றாரியோ மாகாணத்தின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் மாகாணத்தின் 2023 க்குரிய இலையுதிர் கால வரசெலவுத் திட்ட அறிக்கை வெளிவந்துள்ளது.

ஒன்றாரியோமாகாணத்தின் பொருளாதாரத்தை இன்னும் பலப்படுத்துவதற்கு ஒன்றாக ஒரு வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல் **(Building a Strong Ontario Together)** என்ற தலைப்பில் ஓர் திடத்தை ஒன்றாரியோ மாகாணத்தின்நிதியமைச்சர் **Peter Bethlenfalvy** அவர்கள் 2023 ஒன்ராறியோ பொருளாதாரக் கண்ணோட்டம் என்ற தலைப்பில் மற்றும் நிதி மதிப்பாய்வுடன் வெளியிட்டுள்ளார். (உள்ளே செய்தி 6ம் பக்கத்தில்)



## 'பெரிய' நடிகர்களின் திரைப்படங்களை சில மாதங்களுக்கு 'தள்ளி' வைத்து விட்டு நம்மவர் வெண்திரைப்படங்களை வெற்றியடைச் செய்வோம்

மீண்டும் நம்மவர் திரைப்படம் ஒன்று எதிர்வரும் 18-11-2023 மற்றும் 19-11-2023 ஆகிய தினங்களில் கனடாவின் ஸ்காபுறோ நகரின் வுட்சைட் சினிமாவில் நம் தமிழ் மண்ணின் தயாரிப்பாய் திரையிடப்படுகின்றது.

அண்மையில் 'பாலை நிலம்' திரைப்படத்தை கண்டு களித்து ஆதரவு வழங்கிய எமது கனடா திரைப்பட ரசிகர்கள் இந்த "யாதும் யாவரும்" என்னும் நம்மவர் திரைப்படத்திற்கும் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்.

அவுஸ்த்திரேலியா வாழ் நமது கலைஞர்களும் இதில் நடித்தும் ஏனைய வழிகளில் பங்கெடுத்தும் உள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அனுமதிச் சீட்டுக்களுக்கு சிவர்-416 771 8681

## கப்பலும் அமைச்சரும் தூதுவரும்
### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

இந்த வாரம் சீனத் தூதுவர் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அவர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்த்தார். நலிவுற்றவர்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கு நிவாரணமும் வழங்கினார்.

குடிமக்கள் சமூகங்களை சேர்ந்தவர்களோடு ஜெட் விங் ஹோட்டலில் ஒரு சந்திப்பு இடம் பெற்றது. சந்திப்பின்போது சீனா கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்தை ஆதரித்து வருவது சுட்டிக்காட்டப்பட்டது. அரசாங்கத்தை ஆதரிப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளையும் நில ஆக்கிரமிப்பையும் சிங்கள பௌத்த மயமாக்கலையும் ஆதரிப்பதாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சிவில் சமூக பிரதிநிதிகள் எடுத்துக் கூறினார்கள். இலங்கை இனப்பிரச்சினைக்கு சீனா எப்படிப்பட்ட ஒரு தீர்வை முன்வைக்கின்றது என்றும் கேட்கப்பட்டது. (உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)